
ரூ. 8.00

திருவள்ளுவர் ஆண்டு 2046 பங்குனி - சித்திரை
மார்ச் - ஏப்ரல் 2015



மக்கள் சிந்தனை

அகவை எழுபது பெருமங்கல விழாவில்
திருக்குறள் செம்மல் ந.மணிமொழியனார் - திருமதி. கமலாதேவி மணிமொழியனார்
இணையரை வாழ்த்தும் குருமகாசந்நிதானம் - 01-04-2015

சமய சமுதாய இலக்கிய
திங்களிதழ்

சிறப்பாசிரியர் : தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

மக்கள் சிந்தனை

நிறுவனர் : தவத்திரு குன்றக்குடி அடிகளார்

திருவள்ளுவர் ஆண்டு 2046	மாதம் : பங்குனி - சித்திரை
மலர் : 30	இதழ் : 3 & 4

கற்றாருள் கற்றார்

வகைஅறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
தொகைஅறிந்த தூய்மை யவர்.

என்றார் திருவள்ளுவர்.

அவை அஞ்சாமல் எடுத்து உரைப்பது மட்டும் அல்ல! சொல்லும் சொற்கள் சொல்லும் நோக்கத்தை, தாக்கத்தை, மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். பேசும் சொற்கள் பயனில்லாச் சொற்கள்; பயன்பாட்டை விளைவிக்கும் சொற்கள்; விருப்பு, வெறுப்பு, அச்சம் இவைகளைக் கடந்து குறிக்கோளோடு பேசப்படும் சொற்கள்.

கம்பனின் இராமகாதையில், இராவணனோடு போரை நிறுத்த அங்கதனை இறுதித் தூதாக அனுப்புவான் இராமன்

வெட்டு ஒன்று; துண்டு இரண்டு என்பது போலச் சொல்ல வேண்டி நோக்கத்துக்கு ஏற்ப அங்கதன்தான் தூதாகச் சென்றான்.

"கூவி இன்று என்னை, நீ போய், "தன் குலம்
முழுதும் கொல்லும்
பாவியை, அமருக்கு அஞ்சி அரண் புக்குப்
பதுங்கினானை,

தேவியை விடுக! அன்றேல், செருக் களத்து
எதிர்ந்து, தன்கண்
ஆவியை விடுக!" என்றான், அருள் இனம்
விடுகிலாதான்?

தேவியை விடுக! இல்லையேல் ஆவியை விடுக! என்றான் அங்கதன்.

போரை நிறுத்த வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் இராமன் அங்கதனை அனுப்பிய தூது வெற்றி பெறவில்லை.

என்ன நோக்கத்திற்கு? போரற்ற சூழலை உருவாக்க, சோர்வில்லாச் சொற்களை அவர்களைப் பார்த்து அங்கதன் பயன்படுத்தினான்.

குருச்சேத்திரப் போர்க்களத்தில் போரைத் தடுக்க கண்ணன் முயற்சித்தான். "பாண்டவர்களுக்கு ஐந்து ஊர்களைக் கொடு" என்று தொடங்கி "ஐந்து வீடுகளையேனும் கொடு" என்றான் கண்ணன்.

"ஊசி முனை அளவு இடம் கூடக் கிடையாது" என்று துரியோதனன் மறுத்தபின் போர்முனை தோன்றியது.

அமெரிக்காவில் தென்னாப்பிரிக்க கறுப்பின மக்களைக் காலம் காலமாய் அடிமைப் படுத்திய நிலை இருந்ததை மீட்க நடந்த போருக்குப் பின் 23000 வீரர்கள் பலியானார்கள். இறந்த போர்வீரர்களுக்கு அஞ்சலி செலுத்த கெட்டிஸ்பர்க் நகரில் லிங்கன் ஆற்றிய உரை உலகம் போற்றும் உன்னத உரையாகும்!

15000 பேர் திரண்டு நின்ற கூட்டத்தில் லிங்கன் உரை ஆற்றியது மூன்று நிமிடங்கள். 272 சொற்கள் அடங்கிய பேச்சு இதுதான்.

"மக்களால் மக்களுக்காக உருவாக்கப்பட்ட மக்களின் அரசாங்கம்" என்ற வரிகள் பொன் எழுத்துக்களில் பொறிக்கத்தக்க அஞ்சலிப் பிரகடனம்! அடிமை முறையை ஒழித்த சமத்துவத்திற்கானப் பிரகடனம்.

1893 செப்டம்பர் மாதம் 11ஆம் தேதி அமெரிக்காவின் சிகாகோ நகரில் கொலம்பஸ் அரங்கில் சுவாமி விவேகானந்தரின் உரை முழக்கம் ஆன்மீக தளத்தின் அரிமா முழக்கம்! அமைதிக்கும், சகிப்புத் தன்மைக்கும், நல்லிணக்கத்திற்கும் அழைப்பு விடுத்த அன்பின் முழக்கம்.

இந்தத் துறவி என்ன பேசி விடப் போகிறார் என்று அரங்கத்தில் அனைவரும் அலட்சியமாக இருந்த நேரத்தில்,

"My dear brothers and sisters – எனதருமை சகோதர சகோதரிகளே" என்று தொடங்கிய பேச்சு அன்பின், ஆன்மீகத்தின் ஊற்றாகப் பொங்கிப் பிரவாகம் எடுத்தது.

"எல்லா நதிகளும் ஒரே கடலில் கலக்கின்றன. எல்லா மதங்களும் ஒரே ஆண்டவனை நோக்கியே செல்கின்றன.

மத வெறியாலும், மதப் போர்களாலும் மனிதர்கள் அடைந்த கஷ்ட நஷ்டம் போய் நல்லகாலம் வந்து விட்டது! இன்று காலை அடிக்கப்பட்ட மணி இந்த மாநாட்டின் அழைப்பு மணி மட்டும் அல்ல! மத வெறியின் சாவு மணியும் ஆகும்"

என்று விவேகானந்தர் முடித்தபோது, அந்த அவையில் இருந்த 7000 பேரும் எழுந்து நின்று பல நிமிடங்கள் கை தட்டினர்.

அமெரிக்காவின் கெட்டிஸ்பர்க் உரையும், சிகாகோ உரையும் மேடை முழக்கங்கள் அல்ல! மனித மனங்களைப் பக்குவப்படுத்தும், உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்லும் உண்மையின் பொழிவு! சத்தியத்தின் சாரம்!

எல்லா மக்களுக்கும் எல்லாக் காலத்துக்கும் ஏற்றுக் கொள்ளும்படியான உண்மை உள்ளடங்கிய இலக்கிய நயத்துடன் ஆற்றுகின்ற உரைகள் காலத்தை வென்று விளங்குகின்றன.

சாமானியராகப் பிறந்து சாமானிய மக்களின் வாழ்க்கையில் மாற்றங்களை நிகழ்த்திய சொல் ஏர் உழவர்! நாற்சந்தியிலும், நாடாளுமன்றத்திலும் அவர் பேச்சைக் கேட்க மக்கள் ஆர்வமாய் இருப்பார்கள். "இவர்தான் எங்கள் தமிழகத்தின் டிஸ்ரேலி" என்று டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்களால் பாராட்டப் பெற்றவர்.

நாடாளுமன்ற மாநிலங்கள் அவையில் அவரின் முதல் உரை கேட்டு முன்னாள் பாரதப் பிரதமர் வாஜ்பாயி அவர்கள்,

"அனைவரின் இதயம் கவர்ந்த அற்புத உரை" என்று பாராட்டினார்.

மேடைப் பேச்சால் உலகத்தின் இதயம் கவர்ந்த அந்த அற்புத மனிதர் "மேடைப் பேச்சு எப்படி இருக்க வேண்டும்" என்று அவரே கூறிய விளக்கம்:

மேடைப்பேச்சு கலாட்சேபம் அல்ல, விவாதத்திற்கு உரிய பிரச்சனைகளைப் பற்றிய கருத்துக்களை வெளியிடுவது. இனிமை எல்லோருக்கும் கிடைக்கும்படி செய்யும் நாவாணிபம் அல்ல. மேடைப்பேச்சு, வாய்பொத்தி, கைகட்டிக் கேட்கும் மக்கள் எதிரேநடத்தும் உபதேசமல்ல, அருள்வாக்கு அல்ல, பேசுபவர் கேட்பவர்களை விட மேதை

என்று ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலையும் அல்ல. கேட்பவர்கள் இன்ன பொருள் பற்றிப் பேசிடுக எனப் பணித்திட, பேசுபவர் அது போலவே நடத்தும் வசன சங்கீதமும் அல்ல. வாழ்க்கையுடன் தொடர்பு கொண்ட பிரச்சனைகளைப் பற்றி மக்கள் குழப்பமான கருத்துக்களைக் கொண்டிருந்தால் தெளிவு அளிப்பது. மக்கள் மருண்டிருந்தால் மருட்சியை நீக்குவது. மக்கள் கவலையற்று இருந்தால் பிரச்சனையின் பொறுப்பை உணரச் செய்வது போன்ற காரியம். நீதியை நிலைநாட்ட, நேர்மையை வலியுறுத்த, நாட்டிற்கேற்ற திட்டங்களை எடுத்துரைக்க, மடமையை மாய்க்க, கொடுமைகளை, மாய்க்க, கொடுமைகளைச் சாய்க்க, சிறுமைகளை, சீரழிவுகளைப் போக்க ஆர்வம் தோன்ற வேண்டும். அந்த ஆர்வம் ஏற்படுத்தும் சிந்தனையிலே பூத்திடும் நல்ல கருத்துக்களை, அழகுறத் தொடுத்து அளிப்பதே மேடைப்பேச்சு" என எடுத்துரைக்கின்றார்.

இப்படிக் குறிப்பிடும் அந்த மனிதர் மேடைப்பேச்சுக்கு இலக்கணமாய் இலக்கியமாய் விளங்கிய அண்ணா என்ற அற்புத மாமனிதர்.

"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்றார். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று முழங்கியவர்.சலிப்பு வருகிற நேரத்தில் வள்ளுவரின் உருவத்தை ஒருமுறை பார்த்தால் வந்த சலிப்பு பறந்து போகும்! சந்தேகம் வரும்போது திருக்குறளில் காணப்படும் கருத்துக்களை எண்ணிப் பார்த்தால் வந்த ஐயப்பாடுகள் நீங்கி விடும் என்றார் அண்ணா.

பேருந்துகளில்,

"யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"

என்ற குறள் யாருக்காக எழுதப்பட்டது?" என்று சட்டமன்றத்தில் முதல்வர் அண்ணாவிடம் கேட்டபொழுது, "நாக்கு உள்ளவர்கள் அனைவருக்கும்..." என்று சாதுர்யமாக அண்ணா பதில் அளித்தார்.

எதிர்த் திசையில் இருந்து கேட்கப்படும் எந்த வினாக்குறிகளையும் வியப்புக்குறிகளாக மாற்றியவர் அண்ணா.

ஒப்பனைக்கும் அழகுக்கும் உரையாற்றாமல் மனித மனங்களைப் பண்படுத்தவும், மேம்படுத்தவும், மனித குலம் மேன்மையடையவும் ஆற்றுகின்ற உரைகள் எல்லாம் கால வெள்ளத்தில் அழியாமல் நின்று நிலைக்கும்.

காலத்தை வென்று விளங்கும் உரைகளாகத் தரும் அத்தகையவர்களைத் தாம் திருவள்ளுவர் "கற்றாருள் கற்றார்" என்று அழைக்கின்றார்.

கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு வார்.

என்றும் வேண்டும் இன்பம் அன்பு

மலை ஏறினால் உடலின் சுமைகுறையும்!
மாதேவன முருகன் முன்பு உருகினால்
இதயத்தின் சுமை குறையும்!
என்னே அவன் பெருங்கருணை!
நம்மை மறந்தோம்!
நான் அற்றுப் போனது!
ஆணவத்தை மடை மாற்றும், சம்ஹார
வேலன், சஞ்சரித்து வருகின்றான்!
இடர்களையும் ஆறுமுக வேலன்
அகிலம் எல்லாம்
அருள்பாலித்து வருகிறான்!

–தவத்திரு பொன்னம்பல அடிகளார்
(திருக்குட நீராட்டு விழா மலர்)

பெரியபுராணமும் வாழ்வியலும்

(தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்)

பேசுவதற்கு அரிய தொண்டர்களின் பெருமை பற்றிப் பேசப்படுவதால் "பெரியபுராணம்" என்று அழைக்கப்படுகிறது. இது திருத்தொண்டர்களின் புராணம் என்றும் அழைக்கப்படுகிறது. வாழ்வாங்கு வாழ்ந்த நற்றமிழ் சான்றோர்களின் சரிதம்தான் "பெரியபுராணம்". தொண்டையே உயிர் மூச்சாகக் கொண்ட அடியார்களின் வரலாற்றை விரிவாகப் பேசுகின்றது.

தொண்டலால் உயிர்க்கு ஊதியம் இல்லை என்று வாழ்ந்த அடியவர்கள்தான் பெரியபுராணத்து அடியவர்கள்! பூசும் நீறுபோல் உள்ளும் புனிதர்கள் அவர்கள்!

உள் ஒன்று, புறம் ஒன்று என்று வாழாத உண்மை அடியவர்கள் பெரியபுராணத்து அடியவர்கள்! அவர்களுக்குக் கேடும் ஒன்றுதான்! ஆக்கமும் ஒன்றுதான்! இன்பமும், துன்பமும் ஒன்றுதான்!. வாழ்வும் தாழ்வும், ஏற்றமும் இறக்கமும், நன்மையும் தீமையும், சொர்க்கமும், நரகமும் ஒன்றுதான். அந்த அடியவர்களைப் பற்றி சேக்கிழார் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்;
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்;
கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்;

தொடர்ந்து சேக்கிழார் பாடுகின்றார்.

ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே
பாரம் ஈசன் பணிஅலாது ஒன்றுஇலார்;
ஈர அன்பினர்; யாதும் குறைவுஇலார்
வீரம் என்னால் விளம்பும் தகையதோ?

அடியவர்களின் அடையாளம் உருத்திராக்கமாலை, திருநீற்றுப்பூச்சு, கிழிந்த கந்தலாடை, இதயம் ஈசன் (சிவன்) பணியையே

சிந்திக்கின்றது. நானும் பொய், என் நெஞ்சும் பொய் என்று இதயம் ஈரம் நிறைந்த அன்பினால் கசிந்து உருகுகின்றது.

செல்வம், அதிகாரம், எதற்கும் அஞ்சாத வீரமும், இதயத்தில் சிவன் பணியைச் சிந்திக்கும் ஈர அன்பும் உடைய அடியார்கள் பற்றிச் சேக்கிழார் விரிவாக விளக்கமாக தருகின்றார்.

அவர் காட்டும் அடியார்களில் "அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை" என்ற அடியொற்றி வாழ்ந்த அடியார்கள் உண்டு. "தன்னைத் துறந்து தொண்டை உறவாய்க்" கொண்டு வாழ்ந்த அடியார்கள் உண்டு.

"இருந்து ஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்து ஓம்பி வேளாண்மை செய்தல் பொருட்டு" என வாழ்ந்த அடியவர்தாம் "இளையான்குடி மாறநாயனார்" என்ற அடியவர். தம் இல்லம் வரும் அடியவர் அனைவருக்கும் அவர்தம் பசி ஆற்றி அனுப்புவதை ஆற்று ஒழுக்கான கடமையாய்க் கொண்ட கர்மவீரர்!

சிறப்பாய்ச் செல்வம் இருந்தபொழுது வற்றாது நடைபெற்ற பசிப்பிணி நீக்கும் திருப்பணி, வறுமை வந்தபோதும் தடைப்படவில்லை.

மழைக்காலம் ஒன்றில் வறுமை வந்தபொழுதும் அடியவர் ஒருவர் பசியோடு வந்த பொழுது, அந்தப் பணியை இடையறாது நிறைவேற்றினார்.

"வீட்டில் நெல் இல்லை! அரிசி இல்லை! காய்கறி இல்லை! விறகு இல்லை! எதுவுமற்ற நிலையில் வறுமையின் உச்சத்தில் இளையான்குடி மாற நாயனார் இருந்தார்.

உலகிற்கு உணவு அளிக்கும் பசிப்பிணி மருத்துவர் சிவபெருமான் அடியார் திருக்கோலம் பூண்டு இளையான்குடி மாற நாயனார் இல்லம் வந்தார்! வளம் இருந்தபொழுது வாரி வழங்கிப் பசிப்பிணி தீர்த்த நாயனாருக்குப் பெருஞ்சோதனை! தானே கடும்பசியால் சோர்ந்திருந்தார். அந்த அடியவருக்கு அமுது (உணவு) அளிக்க ஆயத்தமானார். நாயனாரின் இல்லத்தரசி மறுகி நின்றார்.

வறுமையின் உச்சம்! வீட்டில் அரிசி, மளிகைச்சாமான், காய்கறி இல்லை. அடுப்பு எரிக்க விறகு கூட இல்லை. இந்நிலையில் கடன் கொடுப்பார் எவரும் இல்லை. கேட்டுப் பெறவும் நேரம் இல்லை! அம்மையார் அரிய யோசனை ஒன்றைச் சொன்னார்! வீட்டில் நெல், அரிசி இல்லை. இன்று தான் நாம் விதை நெல்லை விதைத்திருக்கின்றோம். அதை அரித்துக் கொண்டு வந்து கொடுத்தால் அமுதாக்கி விடலாம் என்று கூறினார். நாயனார் பெருஞ்செல்வம் பெற்ற மகிழ்ச்சியைப் போல் எல்லை இல்லா மகிழ்ச்சி அடைந்தார். மழை பொழியும் நள்ளிரவில் நாயனார் ஒரு கூடையைத் தலையில் கவிழ்த்துக் கொண்டு வயல் நோக்கிப் புறப்பட்டார். கால்களினால் தடவி தடவிச் சென்றார். வயலை அடைந்து மழை நீரில் மிதந்த நெல் முளைகளை கோலிவாரி அவைகளை கூடைகளில் நிரப்பித் தூக்கி வந்தார்.

நாயனார் வரவைப் பேராவலோடு எதிர்பார்த்திருந்த நாயகியார் கூடையை அன்புடன் இறக்கி நெல்முளைகளை கழுவி, நாயனாரைப் பார்த்து "விறகு இல்லையே" என்றார்.

நாயனார் தம் இல்லத்தின் வரிச்சுகளை அறுத்துத் தள்ளி விறகாக்கினார்.

"காய்கள் இல்லையே" என்று அம்மையார் சொல்ல, தம் வீட்டுப் பின்புறம் சென்று புன்செய்க் குறும்பயிர்களைத் தடவிப் பிடுங்கிக் கொடுத்தார்.

வழிவரும் இளைப்பி னோடும்
வருத்திய பசியி னாலே
'அழிவுஉறும் ஐயன்' என்னும்
அன்பினின் பொலிந்துசென்று,
குழிநிரம் பாத புன்செய்க்
குறும் பயிர் தடவிப் பாசப்
பழிமுதல் பறிப்பார் போலப்
பறித்து அவை கறிக்கு நல்க.

என்று சேக்கிழார் குறிப்பிடுகின்றார்.

உயிரின் பாசத்தினை (ஆணவ மலத்தின் மூலத்தை) அறுத்துத் தவஞான நிலையில் அன்பினில் பொலிந்து நிற்கின்றார் இளையான்குடி மாறநாயனார்.

இளையான்குடி மாறநாயனார் தம் இல்லத் துணையோடு நடத்திய இல்லறம் அன்பின் வழிப்பட்ட நல்லறம், பண்பின் வழிப்பட்ட பேரறம், இறைவனை அடியவராக்கி அவர் இல்லம் நோக்கி அழைத்து வந்தது. உலகின் பசிப்பிணி மருத்துவர் பசி ஆற்றிய பேரன்பின் பிறப்பிடம் இளையான்குடி மாற நாயனார் இல்லம்!

ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்

என்ற அருங்குறளின் இலக்கணம் இளையான்குடி மாற நாயனார் இல்லம்!

அந்த இளையான்குடி மாறநாயனார் இல்லத்திற்கு அஞ்சலக முகவரி இல்லை. அடியவர் அடிவயிற்றுப் பசித்தீயை அணைக்கும் அந்த இல்லத்திற்கு அன்பின் முகவரிதான் உண்டு!

இன்று பெரியபுராணம் காட்டிய அன்புத் தடம் எப்படி தடம் மாறி இருக்கின்றது? பொருள் ஈட்டும் சமூகத்தின் போக்கில் இல்லங்களின் மனித இதயங்கள் வாழாது இயந்திரங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

பெற்றோர்களும், குழந்தைகளும் காப்பகங்களில் வாழ்ந்து வருகின்றனர். வளர்ந்து வரும் சிற்றுண்டிச்சாலைகளும், தங்கும் விடுதிகளும் விருந்து ஓம்பும் பண்பு நம்மிடம் இருந்து விடைபெற்று விட்டதைக் காட்டுகின்றன.

நாயன்மார்கள் வாழ்ந்த நற்றடம் மீண்டும் புதுப்பிக்கப்பட வேண்டும்.

'இல்லை' எனாது வழங்கிய இயற்பகை நாயனார்
தம் இல்லத்தில் பசிப்பிணி தீர்ப்பதையே வாழ்வாய்க் கொண்ட இளையான்குடி மாற நாயனார்,

நாவுக்கரசு பெருமான் காட்டிய நற்றொண்டு, கண்ணப்பர் காட்டிய பக்தி வாழ்க்கை வேண்டும்.

தொண்டும், உறவும், துறவும், தோழமையும், அன்பும் பெரியபுராணம் காட்டிய பக்தி வாழ்க்கை. அந்த வாழ்க்கை நெறியை மீண்டும் புதுப்பிக்க வேண்டும்.

நாயன்மார்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவோம்!
தென்னாடுடைய சிவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்!
திருச்சிற்றம்பலம்.

திறமையான , நேர்மையான அரசியல்

எந்தப் பதவியும் இல்லாமலே திறனுடன் செயல்படுபவர்களை அரசியல் எனும் பெருங்கடலில் நீந்தக்கூடிய திறன் படைத்தவர்கள் என்று தேர்வானால் , நாடாளுமன்ற உறுப்பினர் ஆவார்கள். அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு அவர்களுக்கு எந்தச் சலுகைகளும் , பதவி உயர்வுகளும் அளிக்காமல் தத்தமது தொகுதிகளை அவர்கள் எவ்வாறு பராமரிகிறார்கள் என்பதை கண்காணித்து திறனுக்கேற்ப இளநிலை அமைச்சர்களாகவோ, அமைச்சராகவோ நியமிக்கிறோம். இத்தனை சோதனைகளை கடந்து வருபவர்கள் சேவை மானப்பான்மையுடன் செயலாற்றக் கூடியவர்களாகவே இருக்கிறார்கள். திறமையான , நேர்மையான அரசியல்வாதியைக் கண்டெடுப்பது வெறும் முதல்கட்ட பணி மட்டுமே. அதன் பிறகு , அவர்கள் அதே நேர்வழிப்பாதையில் பயணிக்க வேண்டும் என்றால், அவர்களுக்கு வழங்கப்படும் ஊக்கத் தொகை ஊக்கமூட்டுவதாக இருக்க வேண்டும். மக்களின் காசுக்கு ஆசைப்படாத அளவுக்கு ஊதியத்தை அரசே அளித்துவிட்டால், அதிகாரத்தில் இருப்பவர்கள் வெளியில் கை நீட்ட மாட்டார்கள் என்பதும் லீயின் நம்பிக்கையில் ஒன்று. சிங்கப்பூரின் ஆறு முன்னணித் துறைகளில் அதிக ஊதியம் பெறும் முதல் எட்டுப் பேரின் வருமானம் எவ்வளவோ, அதில் மூன்றில் இரண்டு பங்கு சிங்கப்பூர் அமைச்சர்களின் ஊதியம். லீயின் நம்பிக்கைகளுக்கும் செயல்பாடுகளுக்கும் இடைவெளி இருப்பதில்லை.

நன்றி: கல்வி டுடே

திருக்குறள் செம்மல் திரு. ந.மணிமொழியன் - திருமதி. கமலாதேவி மணிமொழியன்

அகவை எழுபது பெருமங்கல விழா

உலகத் திருக்குறள் பேரவையின் முதன்மைப் பொதுச் செயலாளர் திருக்குறள் செம்மல் திரு. ந. மணிமொழியன் - திருமதி. கமலாதேவி மணிமொழியன் அகவை எழுபது பெருமங்கலவிழா 31.03.2015, 1.04.2015 இரு நாள்களிலும் மதுரை சொக்கிகுளம் தமிழவேள் பி.டி.இராஜன் திருமண மண்டபத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

முதல் நாள் 31.03.2015 செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணியளவில் சேலம் திரு. டாக்டர்.ஏ.எஸ்.கணேசன் அவர்கள் தலைமை ஏற்க வெள்ளகோவில் திரு.டி.ஆர்.ஜி. குணசேகரன் அவர்கள் முன்னிலையில் விழா தொடங்கியது. மதுரை ஆதீனம் 292வது குருமகாசந்நிதானம் அவர்கள் அருளாசியுரை வழங்கினார்கள். அடுத்து, செல்வி. சௌந்தர்யா கார்த்திகேயன் குழுவினர் நடன நிகழ்ச்சி பத்மஸ்ரீ.டாக்டர்.சீர்காழி சிவசிதம்பரம் குழுவினர் இசைநிகழ்ச்சி ஆகியன நடைபெற்றன். இரவு 8.30 மணி அளவில் சிறப்பு விருந்து நடைபெற்றது.

1.4.2015 புதன்கிழமை காலை 4.30 மணிக்கு மங்கல இசையுடன் தவத்திரு.டாக்டர்.கி.பிச்சைக்குருக்கள் அவர்கள் வேள்வித் தலைமை ஏற்க வேள்வி நிறைவேறி காலை 7.00 மணியளவில் கலச நன்னீராட்டும், அதன் பின் பன்னிரு திருமுறைப்பண்ணிசை, மாலை அணிவித்தல், வாழ்த்து வழங்குதல் ஆகியன நடைபெற்றன.


காலை 10.15 மணி அளவில் திருப்பெருந்திரு மகாசந்நிதானங்களின் அருளாசி அரங்கம், தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. பொற்கிழிக் கவிஞர் திரு.சொ.சொ.மீ. சுந்தரம் மங்கல வாழ்த்துப்பாடினார். பேரூர் ஆதீனம் தவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள், தவத்திரு மருதாசல அடிகளார் அவர்கள், தவத்திரு குமரகுருபர சுவாமிகள்

அவர்கள் தவத்திரு. கமலாத்மானந்தா சுவாமிகள், தவத்திரு சுந்தரானந்த சுவாமிகள் ஆகியோர் அருளாசியுரை வழங்கினர். பிற்பகல் 4.00 மணிஅளவில் திருக்குறள் செம்மல் ந. மணிமொழியன் அவர்களுக்குப் பாராட்டுவிழாவும் - திருக்குறள் திருவிழாவும் நடைபெற்றன. பாராட்டுவிழாவுக்கு அறிஞர் திருமிகு. தமிழண்ணல் அவர்கள் தலைமை வகித்தார். திருமிகு. கருமுத்து.தி. கண்ணன் அவர்கள் முன்னிலை வகித்தார். சிறப்பு விருந்தினராக மேதகு நீதியரசர் புகழேந்தி அவர்களும் திருமதி. ருக்மணி பி.டி.ஆர். பழனிவேல்ராஜன் அவர்களும் வருகை தந்திருந்தனர். முனைவர். பா. வளனரசு அவர்கள், இலக்கியத் தேனீ இரா. மோகன் அவர்கள், கலைமாமணி இளசை சுந்தரம் அவர்கள், கலைமாமணி கு.ஞானசம்பந்தன் அவர்கள் ஆகியோர் விழா நாயகருக்குப் பாராட்டுரை வழங்கினர். கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் சிறப்புப் பேருரையாற்றினார்.

பின்னர் தமிழறிஞர் சாலமன் பாப்பையா அவர்களை நடுவராகக் கொண்டு சிறப்புப் பட்டிமன்றம் தொடங்கியது. பட்டிமன்றத்தை அருட்செல்வர் சங்கரசீதாராமன் அவர்கள் தொடங்கிவைத்தார். பேராசிரியர். தா.கு. சுப்பிரமணியம் அவர்கள், தமிழ்த்திரு. ராஜா அவர்கள் பேராசிரியர் இராம. சௌந்தரவல்லி அவர்கள், பேராசிரியர் ரேவதி சுப்புலெட்சுமி அவர்கள் ஆகிய நால்வரும் பட்டிமன்றத்தில் பேசினர். இந்நிகழ்ச்சியுடன் நன்றி நவில மங்கலமாக இப்பெருவிழா இனிதே நிறைவெய்தியது.

முயற்சியுடைய வாழ்க்கையில் வரும்
இடர்கள்- வெற்றியைத் தடுத்து விடாது.
இடர்கள் வேறு - இயலாமை என்பது வேறு.
இடர்களையே இயலாமை என்று கருதுகிறவர்களால்
காரிய சாதனை செய்ய இயலாது.
ஒரு பணியை அறிவார்ந்த ஆய்வுடனும்
முழுமையான பயன்பாட்டு நோக்குடனும் செய்தால்
முழுமையான பயன் விளையும்.

-அருள்நெறித்தந்தை



ஜெயகாந்தன் "காலம்" ஆகிவிட்டார்!

(கிருங்கை. சேதுபதி)

எழுத்தாளர் ஜெயகாந்தன் நிரந்தரமாக விடைபெற்றுக் கொண்டுவிட்டார், நம்மிடமிருந்து; இந்த உலகத்திடமிருந்தும்!

"நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும் பெருமையை" மீண்டும் ஒருமுறை நிலைநாட்டியிருக்கிறது காலம். அந்தப் பெருமையைக் காலத்திற்கு வழங்கிய பல "ஒருவன்"களில் ஜெயகாந்தனும் ஒருவர் ஆகியிருக்கிறார். "நெருநல் உளனாக" இருந்த அந்த "ஒருவனிடம்" ஒன்றிய காலம், "அவனாகவே" ஆகி நிலைபெற்றிருக்கிறது. ஆம். ஜெயகாந்தன் "காலம்" ஆகிவிட்டார்.

அது அவ்வளவு எளிதன்று. அதற்கு அவர் கொடுத்த பெருவிலை, அரிதினும் அரிதாய்க்கிட்டிய மானுடப்பிறப்பின் மகத்தான வாழ்வு.கடலூர் மஞ்சக்குப்பத்தில் 24.04.1934ல் தண்டபாணிபிள்ளை - மகாலட்சுமி அம்மாளுக்கு மகவாகப் பிறந்த முருகேசனின் இலக்கியப் பெயர் - ஜெயகாந்தன்.

"திருப்பாதிரிப்புலியூர் என்பது எங்கள் ஊரின் இன்னொரு பகுதி. பாடல்பெற்ற ஸ்தலம். அப்பர்பெருமானைக் கரையேறவிட்டதும் எங்கள் ஊர்தான்" என்று தன் ஊர்ப் பெருமை பேசும் ஜெயகாந்தனும் அந்த ஊரில் கரையேறித் தருமமிகு சென்னை வந்து அப்பர் பெருமானைப் போலவே, 81 ஆண்டுக்காலம் வாழ்ந்து 18.04.2015 அன்று நிறைவுபெற்றவர்.

"சின்னஞ்சிறு வயதில் இருபத்தொரு வேலைகளை செய்திருக்கிறேன். ஒவ்வொரு வேலையில்சேரும்போதும் அதிலேயே வாழ்க்கை முழுவதும் கழியப்போகிறது என்று நினைத்துக் கொள்வேன். ஆனால், என் சுபாவம், நெடுநாள் ஒரு வேலையில் இருக்கவிடாது. ஐஸ் பெட்டி தள்ளியிருக்கிறேன். தஞ்சாவூரில் குதிரை வண்டிக்காரனுக்குத் துணையாக வேலை பார்த்திருக்கிறேன். நான் அதிக நாள் பார்த்த வேலை புத்தகம் பிழை திருத்துவது. ஆனால், வெளியில் சொல்லக்கூடாத, தப்பான எந்த ஒரு வேலையையும் செய்ததில்லை. மானமான எந்த

வேலையும் செய்து பிழைக்க நான் தயாராக இருந்தேன். அதுதான் நான்" என்று சொல்லிக்கொண்ட ஜெயகாந்தன் தன்னை ஓர் இலக்கியவாதியாகவே நிலைநிறுத்திக்கொண்டார்.

நான்காம் வகுப்பளவிலேயே பள்ளிக்கல்வியைப் புறந்தள்ளிவிட்டு, வாழ்க்கைக் கல்வியை மக்களிடமிருந்து வாழ்நாளெல்லாம் கற்றவர். கற்றதை – கற்பவர்கள் கடைப்பிடித்து ஒழுகும் வண்ணம் இலக்கியமாக்கிக் கொடுத்தவர். தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக்கழகம் அவருக்கு "முதுமுனைவர்" என மதிப்புறு முனைவர்பட்டம் வழங்கிப் பெருமை பெற்றது. ஏற்கெனவே, இராஜராஜன் விருதும் வழங்கிச் சிறப்பித்திருக்கிறது. சாகித்ய அகாதெமி, பாஷாபரிஷத்தின் வாழ்நாள் சாதனைவிருது, ஞானபீடம், பத்மபூஷண் உள்ளிட்ட பெருமைக்குரிய எத்தனையோ விருதுகளை, பாராட்டுக்களைப் பெற்றபோதிலும், வாசகர்கள் கொண்டாடி மகிழ்ந்து போற்றியதையே தமது பெருமைக்குரியதாக ஏற்றுக்கொண்டார். "சிறுகதை மன்னன்", "இலக்கிய வேந்தர்" என்பதான முன்னொட்டுக்களையோ, சிலபல முக்கிய பொறுப்புகளை அவர் ஏற்றபோதிலும் அத்தகைய பின்னொட்டுக்களையோ அவர் சேர்த்துக்கொள்ளாதவர். "எனக்கு ஜெயகாந்தன் என்கிற பெயரே போதும். மாணிக்கவாசகர் என்பது மாதிரி" என்று அவரே சொல்லுவார்.

அவருக்கு ஆழ்வார் பாசுரங்களிலும், திருமுறைகளிலும், கம்பன், வள்ளுவர், இளங்கோ மற்றும் சித்தர் பாடல்களிலும், குறிப்பாக வள்ளலார் பாடல்களிலும் ஆழ்ந்த பரிச்சயமுண்டு. இசையோடு பாடத்தெரிந்த அவருக்கு வீணை வாசிக்கவும் தெரியும். "காலில் நகம் முளைத்த நாள்முதலாய்" அவருள் கவியாய்ப் புகுந்து குருவாகி ஆட்கொண்டவர் மகாகவி பாரதி. ஜீவா, ஆர்.கே.கண்ணன், எஸ்.ஆர்.கே., ஆர்.எச்.நாதன் போன்றவர்களெல்லாம் அவரது ஆசான்கள்.

அவரே, ஆசானாகவும் குருவாகவும் இருந்து உபதேசித்த பலப்பல உண்மைகள் இலக்கியவுருக்கொண்டு, எண்ணற்ற வாசகர்களை நன்னெறிக்குள் உய்த்திருக்கின்றன. நாத்திகர் என்று தொடக்கத்தில் தன்னைச் சொல்லிக்கொண்ட போதிலும் அவருள் கனிந்த ஆத்திகம் அவரை ஓர் ஆன்மிகவாதியாகவே ஆக்கிற்று. அதனால்தான் திரைப்படத்துறை முதலான கலையிலக்கியவாதியாக, அரசியல்வாதியாக, பத்திரிகையாளராக அவர் திகழ்ந்து பெற்ற அனுபவங்களை எழுதிய அவர்

ஆன்மிகவாதியாகத் தன்னை உணர்ந்து, அதனையும் எழுத்தாக்கியிருக்கிறார்.

அவர் இல்லறத்தில் இருந்து இரு பெண் பிள்ளைகளுக்கும் ஓர் ஆண்பிள்ளைக்கும் தந்தையானவர். என்றபோதிலும் அவர் ஓர் இலக்கியத் துறவியாகவே இறுதிவரையிலும் நிலைத்தவர். எதனையும் வெறுக்காத, யாரொடும் பகைகொளாத ஒரு சித்தமனோபாவம் அவருள் நிலைத்திருந்தது. ஓங்கூர் சாமியார் உள்ளிட்ட ஒருசில சித்தர்களோடு இருந்து பழகிய அனுபவங்களும் அவருக்கு உண்டு. எல்லாப் பழக்கங்களும் அவருக்கு இருந்தன. ஆயினும் எந்தப் பழக்கத்திற்கும் பற்றுக்கும் அடிமையாகாத சுதந்திரபுருஷர் அவர். பற்றுகளையும் பற்றுகளின்மீதான பற்றினையும் துறந்த சென்னைப் பட்டினத்தாரான ஜெயகாந்தன் தம் வாழ்நாளில், இலக்கியப் பற்றினையும் துறந்துவிட்டவர். பொது அரங்குகளிலும், இலக்கிய மேடைகளிலும் இலக்கியச் சிங்கமென கர்ஜித்த அவர், மௌனகுருவாகவும் இருந்து காட்டியவர். அவர் இருந்து பேசும் இடங்கள் "சபைகள்" ஆகவும், அவரது ஆழ்வார்பேட்டை அலுவலகம் "மடம்" என்றும் பெயர் பெற்றன. தந்தை பெரியாரோடு, அவரது மேடையில் ஏறி, அவரது கருத்துக்களுக்கு எதிரான தனது விவாதத்தை எடுத்துரைத்து அவரது பாராட்டுக்களையும் பெற்றவர்.

இராமகிருஷ்ணமடம், காஞ்சிமடம் உள்ளிட்டவற்றோடும் தொடர்புடைய அவர், குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனத்துக் குருமகாசந்நிதானம் தவத்திரு அடிகளாரோடு இணைந்து இந்திய சோவியத் நட்புறவுக் கழகத்துத் துணைத் தலைவர்களாகப் பல காலம் பணிபுரிந்தவர். "அக்காலத்தில் உலக அமைதிக்காகவும், அணு ஆயுதத் தடுப்புகளுக்காகவும் அவர் ஆற்றிய பணிகளும் சொற்பொழிவுகளும் எனக்கு அவரை மிக உன்னதமாக அடையாளம் காட்டின. அவர் சமயம் கடந்த சமதர்மப் பிரியர்" என்று பெருமிதத்தோடு எழுதினார்.

"சமுதாய வளர்ச்சியில் அவர் எந்த அளவு நாட்டங்கொண்டிருந்தாரோ, அதே அளவு அரசியலிலும் இலக்கியத்திலும் ஆன்மிகம் கலந்து உறவாட வேண்டும் என்று அவாவினார். அந்த அவாவின் உந்துதலினாலேயே அந்த மடாதிபதி, மடத்தின் எல்லைகளைத் தாண்டி, ஒரு சமுதாயப்புரட்சிக்காரராக மக்களிடையே சஞ்சரித்தார். ஆசாரமும் பக்தியும் கொண்ட சீடர்கள் தம்மை நாடி வரட்டும் என்று மடத்துக்குள் முடங்கிவிடாமல், மக்களை நாடிவந்த, துவராடை பூண்ட

சமுதாயத் தொண்டராக அவர் பணியாற்றினார். நாத்திகவாதமும் பிரிவினைவாதமும் தலைதூக்கிநின்ற காலத்தில் தமிழ் மக்களுக்கு பாரதியின்மூலமும், கம்பனின் மூலமும் தேசிய உணர்ச்சியையும் ஒருமைப்பாட்டுணர்வையும் தட்டி எழுப்பிய தலைவர்களோடு தோளோடு தோளிணைந்து நின்ற இந்தத் துறவியை முற்போக்குச் சிந்தனையாளர்கள் மறக்க முடியாது. இறைவனைத் தமிழ்வடிவமாய்க் கண்ட ஆன்மிகவாதியான அடிகளார் மானுடநேயத்தை மக்களிடையே பரப்புவதையே சமயப்பணியாகக் கொண்டவர்" என்பது அடிகளார் குறித்த அவரது மதிப்பீடு.

"இந்தத் தலைமுறையில் நாம் கண்ட ஒரு சிறந்த எழுத்தாளர், படைப்பு எழுத்தாளர். சொற்பொழிவாளர் திருவாளர் ஜெயகாந்தன் அவர்கள் நல்ல எடுப்பான தோற்றம். பீடுநடை. வாழ்க்கையின் இலக்குகளை இனங்கண்டு எளிதாகக் காட்டுபவர்; உணர்த்துபவர். ஏன் இந்திய தேசியத்திற்கும், பாரத சமுதாயத்திற்கும் ஜெயகாந்தன் அவர்கள் ஆற்றியுள்ள பழுதிலாப் பணிகள் பலவற்றையும் நினைந்து நினைந்து ஒவ்வொரு இந்தியனும் பெருமை கொள்ள உரிமை உண்டு" என்று இவரைப் பற்றி இவர்தம் மணிவிழாக் காலத்தில் மதிப்பீடு செய்து வாழ்த்தினார் அருநெறித்தந்தை அடிகளார்.

தலைமுறை கடந்த பல தமிழர்களை ஈர்த்து மானுடம் பேணி உலக அளவில் தமிழின் உன்னதப் படைப்பாற்றலை நிலைநிறுத்திய ஜெயகாந்தன், ஒரு காந்தியவாதி. மார்க்சியத்தையும் காந்தியத்தையும் இணைத்து இந்தியத்தத்துவமாகக் கண்டவர். அடிகளாரைப் போல், இவரும் கார்ல்மார்க்ஸை, ஓர் ஆன்மிகவாதியாகவே அடையாளம் கண்டார்.

அருநெறித்தந்தை அடிகளார்பால் காட்டிய அதே மதிப்பும் பரிவும் தவத்திரு பொன்னம்பல அடிகளார்மீதும் அவருக்கு இருந்தது. பிறவிப் பெருமேதைகளாக விளங்கிய இவர்களுக்கு ஒரு சிற்றணிலாய் இருந்து தொண்டு செய்யக்கிட்டியது எனது பிறவிப்பேறு என்றே நினைத்து நெகிழ்கிறேன். காலம் கொடுத்த கொடை.

ஜெயகாந்தனின் எழுத்தாக்கங்கள் பெருந்தொகுப்பாக வெளிவந்த காலத்தில், "சிந்தையில் ஆயிரம்" என்று அவர்தம் கட்டுரைப் பெருந்தொகுதிகளை, ஸ்ரீ செண்பகா பதிப்பக உரிமையாளர்

ஆர்.எஸ்.சண்முகம் கொண்டுவந்தார். அப்போது திருச்சி தூயவளனார் கல்லூரியில், யான் தமிழ்ப்பணியாற்றிக் கொண்டிருந்த காலம். அதன் வெளியீட்டுவிழாவினை அங்கு ஏற்பாடு செய்தோம். தூயவளனார் கல்லூரி அருள்துறவியர் முன்னிலையில், தவத்திரு அடிகளார் வெளியிட அப்போதைய தமிழ்ப்பல்கலைக்கழகத் துணைவேந்தர் இ.சுந்தரமூர்த்தி பெற்றுக்கொண்டார். கவிஞர் சிற்பி, எழுத்தாளர் கே.எஸ்.மோதி ராஜகோபால், சந்திரகாந்தன், நவபாரதி, மாத்தளை சோமு உள்ளிட்ட ஸஹ்ருதயர்கள் கலந்துகொண்டவிழாவாக அது திகழ்ந்தது.

பின்னர் கிருங்கையில் பிறந்து புதுவையில் நிலைபெற்ற கபிலன் பதிப்பகம் வாயிலாக, அவரது பேட்டிகள் நூல் தயாரானபோது, ஜெயகாந்தனின் வாழ்த்துதலோடு தொடங்கப்பெற்ற "தொடரும்" இதழ் சார்பில் அதன் வெளியீட்டுவிழா நடத்தப்பெற்றது. சிங்கம்புணரியில், ஜீவா நூற்றாண்டு விழாவிற்குத் தலைமையேற்ற தவத்திரு பொன்னம்பல அடிகளார் அந்நூலை வெளியிட மோதிராஜகோபால் அவர்கள் பெற்றுக்கொண்டதும் மறக்கமுடியாத நிகழ்வுகள்.

நலக்குறைவுப் பொழுதுகளில் தொலைபேசியின் வாயிலாக இவர்கள் உரையாடிய ஒரு சில தருணங்கள் இப்போதும் நெஞ்சில் நிழலாடுகின்றன.ஜெயகாந்தனின் நிறைவுத்தருணத்தில் குன்றக்குடித் திருமடத்து மரியாதையினை ஆதீன அலுவலர் திரு. வைத்தியநாதனுடன் இணைந்து செலுத்துகிற கணத்தில் என்னென்னவோ நினைவுகள். பறம்புமலை பாரிவிழாவில் ஜெயகாந்தனுக்கு விருதளித்துப் பாராட்ட விரும்பி நமது குருமகாசந்நிதானங்கள் எடுத்த முயற்சிகள் கைகூடாமல் போனது காலத்தின் கருணையின்மை என்றுதான் சொல்லவேண்டும்.

நடமாடக் கோயில் நம்பராக உலாவந்த ஜெயகாந்தன், இப்போது படமாடக்கோயிலாகப் பதிவு பெற்றிருக்கிறார். எத்தனையோ ஆன்மாக்கள் மனிதர்களாய் நடமாடப் பாடமெனப் படைப்புகளை நல்கிய பல்கலைக்கழகம் இப்போது நீங்காத துயிலில் நிலைகொண்டுவிட்டது. இன்னும் ஆயிரம் ஜெயகாந்தர்கள் தன் படைப்புப் பணிக்ளைத் தொடரவருவர் என்கிற நம்பிக்கையோடு!

நல்லவர்களின் நம்பிக்கைகளை மெய்ப்பிப்பதற்காகத்தான் இன்னும் ஓய்வின்றிச் சுழன்றுகொண்டிருக்கிறது பூமி, வானம் சாட்சியாக!

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

திருவாசகத் தேன்

(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

பிணக்கிலாப் பெருவாழ்வு

மனித வாழ்க்கையைத் துன்பமயமாக்குவது பிணக்கு. நம்பிக்கையும் - நல்லெண்ணமும் பயிலாத நெஞ்சில் பிணக்குத் தோன்றுகிறது; அல்லது தோன்றும். வேறுபாடுகளை ஏற்றுக்கொண்டு - ஒப்புக்கொண்டு மேவிய அன்புடன் வாழும் திறம் இல்லையானாலும் பிணக்குத் தோன்றும். பிணக்கு பகைக்கு வித்திடும். பிணக்கு வாழ்க்கையில் அமைதியைச் சீர்குலைக்கும். கெட்ட போரிடும் உலகம் தோன்றுவதே பிணக்கினால்தான்.

பிணக்கு வீட்டிலும் தோன்றும்;' சமூக அளவிலும் தோன்றும் பிணக்கின் வளர்ச்சியே வேந்தலைக்கும் கொல் குறும்பு! பிணக்குகளைத் தவிர்த்து வாழ்தலே சிறப்பு. "நான்" "எனது" என்ற செருக்குகளை அகற்றினால் பிணக்குகள் தோன்றா!

ஆற்று வெள்ளத்தில் "சுழி" தோன்றும். இச்சுழியில் சிக்கியோர் எவரும் தப்புதல் அரிது. அதுபோலவே மனிதனும் சாதி, குலம் என்னும் சுழிகளில் சிக்கிக் கொள்ளுதல் அறியாமையேயாம். "நான்", "எனது" என்ற உணர்வு செத்தால் தான் ஆன்மா உய்திநிலையை எய்தும். இந்த உலகில் துன்பங்கள் பலவானாலும் அவற்றிற்குரிய காரணங்கள் இரண்டேயாம். ஒன்று உடல் சார்ந்த "நான்" என்ற அகங்காரம். மற்றொன்று உடைமை சார்ந்த "எனது" என்ற மமகாரம். "நான்" "எனது" என்ற விருப்பங்களிலிருந்து விடுதலை பெறுதல் துன்பத்திலிருந்து விடுதலை பெறுதலுக்குரிய ஒரே வழி. தமக்கு வேண்டுவனவெல்லாம் மற்றவர்க்கும் வேண்டுவனவே என்ற எண்ணப்போக்கு வளரின் பிணக்குகளைத் தவிர்க்கலாம். தமது உரிமையை அழுத்தாமல் மற்றவர் உரிமைகளை மதித்தால் - வழங்கினால் பிணக்குகள் வரா. அழுக்காறு, புறங்கூறல் ஆகிய உறவுகளுக்கு எதிரான கேடுகளை அகற்றுதல் பிணக்கு

வராமல் தடுப்பதற்குரிய தலையாய வழி! மற்றவர்களுக்கு ஊறு விளைவிப்பதில்லை என்ற நோன்பு மேற்கொள்வதாலும் பிணக்கினைத் தவிர்த்துப் பெருவாழ்வு வாழலாம்.

பொதுவாகப் பிணக்குகளைத் தவிர்த்து வாழ்தல் மனிதம் சிறக்க வழி! பிணக்குகள், சிறியன சிந்தித்து, சிறியன செய்வோர் மாட்டே தோன்றும்! பெரியதாக நினைப்பது, விரிந்த பரந்த மனப்பான்மையைப் பெறுவது, நம்பிக்கையுடனும் நல்லெண்ணத்துடனும் பழகுவது, உறவுக்கு முதலிடம் கொடுப்பது, யார் மாட்டும் அடக்கமாக இருப்பது ஆகிய நற்பண்புகளை மேற்கொண்டொழுகுதல் பிணக்குகளைத் தவிர்க்க வழி! பிணக்கு தீய பண்பு. திருவருளுக்கு எதிரானது. ஒருமைக்குப் பகை பிணக்கு. பிணக்கு உடையோர் இம்மையிலும் வாழ்வாங்கு வாழ்தல் இயலாது; மறுமையிலும் பயன் எய்தார். ஆதலால் பிணக்கில்லாத பெருவாழ்வு வாழ முயல்வோமாக!

திருப்பெருந்துறை திருத்தலம்! நமது மலம் மூன்றும் கெட, சிவானந்த வெள்ளம் மேவிய, குதிரைச் சேவகனாய் எழுந்தருளிய பெருமான் திருப்பெருந்துறையில் எழுந்தருளியிருப்பதால் திருப்பெருந்துறையை வாழ்த்துமின்! திருப்பெருந்துறையை வாழ்த்தின் பிறவிக் காட்டின் கருவும் கெடும்! திருப்பெருந்துறை பிணக்கில்லாத பெருந்துறை, பிணக்கில்லாமையால் பெருந்துறையாயிற்று. பெருந்துறை ஊர், தலம்! ஆங்குப் பிணக்கு இலாதார் வாழ்ந்தமையால் அது பெருந்துறையாயிற்று. பெருந்துறை! திருப்பெருந்துறை! திருநலஞ்செறிந்த திருப்பெருந்துறை! மக்களாகப் பிறந்தோர் அனைவரும் விரும்பும் பெருந்துறை! பெருந்துறை பெருந்துறை என்று பேசியே துன்பங் கெடுத்து வாழலாம். இருளகற்றி இன்பம் பெருக்கித் துன்பத்தின் தொடர்பு அறுத்து வாழ்தல் கூடும் திருப்பெருந்துறையைச் சார்ந்தால்! திருப்பெருந்துறைப் பெருமானே! ஆன்மாக்களிடத்தில் பிணக்கிலாத பெருமானே! உன்னை ஏசினும் ஏத்தினும் பிணக்குக் கொள்ளாது அருள்பொழியும் பெருமானே! உன் நாமங்களையே பேசுவர்! இங்ஙனம் திருப்பெருந்துறைச் சிவபெருமான் திருநாமத்தையே பேசுபவர்களுக்கு எதிர்வரும் துன்பம் துடைக்கப்பெறும்.

நேற்றைய துன்பம் அறியாமையால் விளைந்தது! இன்று அதன் தொடர்ச்சி! ஏன்? எதிர்வரும் காலத்திலும் துன்பம்! அந்த எதிர்வரும் துன்பத்தையேனும் தடுத்தலாகாதா? தடுக்கலாம்! எப்படி? எப்போதும் பிணக்கிலாது வாழ்க! பிணக்கிலாத பெருந்துறையைச் சேருக! திருப்பெருந்துறையுறை பெருமானின் திருநாமங்களைப் பேசுக! எதிர்வரும் துன்பம் துடைக்கப்பெறும்! இணையில்லாத இன்பமும் வந்தடையும்! திருவருளின்பம் இச்சையினால் அடையக்கூடியதொன்றன்று! தவத்தால், சீலத்தால், நோன்பால் மட்டுமே எய்த முடியும்!

பிறவிக்கு – பிறவித் துன்பத்துக்கு வித்து ஆணவம்! ஆன்மாவை இயல்பாகவே பற்றியிருப்பது ஆணவம்! இந்த ஆணவம் என்றும் காயாமல் முளைக்கும் இயல்பினது! ஆணவத்தை அழித்தல் இயலாது. ஆணவத்தின் செயல்திறனை முடக்கலாம். ஆணவத்தின் ஆற்றலை அடக்கலாம். வினை செயல் உயிரின் இயல்பு. மனிதத்துக்கு வினையே உயிர்! வினைகள் என்றால் செயல்கள் என்று பொருள்! செய்யும் செயல்களே பயன் தந்துவிடுவதில்லை; செயல்செய்வதன் நோக்கம் என்ன? உள்ளீடு என்ன? அதுவே கைகூடும்! கரும்பு பிடித்தவர் இறந்ததையும் இரும்பு பிடித்தவர் வாழ்ந்ததையும் எண்ணுக! ஆணவம் மேலும் மேலும் அடர்த்து "நான்" "எனது" என்னும் செருக்கினுள் சிக்கித் தலையால் நடந்து திரிந்து ஆகா வினைகள் மேலும் மேலும் செய்தல் வாழும் முறையன்று. ஆணவத்தின் ஆற்றல் மேலோங்கிப் பிறப்பிற்குரிய வித்து மேலும் விளையாமல் தடுத்துக்கொள்ள வேண்டும். அதற்குரிய உத்தி, முதலில் பகைப்புலமாக இருக்கிற ஆணவத்தை அனுகூலமாக்கிக் கொள்ளவேண்டும். இதற்கு "நான்" "எனது" என்னும் செருக்கினை அடக்கி ஆண்டு தாழ்வெனும் தன்மை உடையதாக மகவெனப் பல்லுயிரையும் ஒக்க நோக்கி நல்லனவே எண்ணி, நல்லனவே செய்து இடையறாத திருவருள் சிந்தனையுடன் வாழ்ந்தால் மனம் பக்குவமாகி நல்வாழ்க்கைக்குத் துணையாக அமையும். ஆணவத்தின் ஆற்றல் அடங்கிய நிலையில் இறைவனின் திருவருட் சத்தி ஆன்மாவிடத்தில் கருணை பொழியும். இந்தப் பரிபக்குவ நிலையிலும் உயிர்கள் – ஆன்மாக்கள் ஓயாது தொழிற்படும். ஆயினும் பயன் கருதா நிலையில்

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற அனுபூதி வாழ்க்கையை எய்தும்.

தாம் அடையும் நல்லனவற்றிற்கு மகிழ்தல், அல்லனவற்றிற்குத் துயருறுதல் நெறியுமன்று; முறையுமன்று. வெற்றியும் தோல்வியும் ஒரு முடிவுக்குக் கொண்டு வருபவையல்ல. தொடர்கதைதான். வெற்றி - தோல்வி என்ற மனப்போக்கு சச்சரவுக்குக் காரணமாக அமையும். ஒருவனுடைய வெற்றி; தோற்றவனுடைய உள்ளத்தில் அவமானமாக உறுத்தி அவன் மீண்டும் தன் தோல்வியை வெற்றியாக்க முயல்வான். மீண்டும் போர்! ஆதலால், வெற்றியை வெற்றியாகக் கொள்ளாது தோற்றவர்கள் வெற்றி பெற்றதைப் போல மகிழ்தலுக்குரியன செய்து உயர்த்துக! வாழ்த்துக!

நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவ தெவன் (379)

என்று வள்ளுவம் கூறும். தீதும் நன்றும் கண்டு நோதலும் தணிதலும் வேண்டா என்று புறநானூறு கூறும். ஆன்மீகத்தில் வளர்ந்த மாமனிதர்கள் துன்பங்களில் உழலும் பொழுதும் தம் நிலையில் பிறழார்; திரியார். கரை தவறி விழுவதால் கடல் கலங்கி விடுமா என்ன? ஒருபொழுதும் கடல் கலங்காது. சான்றாண்மைக்கு ஆழி எனப்படுவோர் துன்பங்களினால் நிலை கலங்கார். அவர்கள் இன்பம் விழைதல் இல்லை! துன்பம் இயற்கை என்று எண்ணுவர். இத்தகு வாழ்வியலையே இருவினை ஒத்தல் என்று சமயவியல் கூறும்.

துன்பங்களுக்காகத் துக்கப்படுதல் விலங்கியல்பு ஆகும். துன்பம் நல்லுணர்வு கொளுத்துவதற்காகவே கிடைத்த சாதனம் என்று சான்றோர் கருதுவர். நல்லதாக நடந்த ஒரு காரியத்திற்குப் பலர் தம்மைக் காரணமாக்கி மகிழ்வர்; பெருமைப்படுவர். அதே போழ்து ஒன்று தீமையாகிவிட்டால் - துன்பமாகிவிட்டால் பழியைப் பலர் மீது தூக்கிப் போடுவர்; விதியை நொந்து கொள்வர். ஏன் இந்த இரட்டை நிலை? நன்மையும் தீமையும் ஏன் ஆன்மாவைப் பாதிக்க வேண்டும்? பானை சுடலாம்! பாலை நேரே சுடவைக்க இயலுமா?

நன்மையையும் தீமையையும் அனுபவிக்கும்பொழுது சமநிலையாகப் பாவித்தல், விருப்பு – வெறுப்புக்கள், காய்தல் – உவத்தல் ஆகியவற்றிலிருந்து விடுதலை பெறுதல் – இருவினை ஒத்தலாகும்.

மாணிக்கவாசகர் முதலமைச்சராக இருந்தபொழுதும் அரச தண்டனைக்கு ஆளாகிய நிலையிலும் சம நிலையில் இருந்தார். அதனாலேயே "நன்றே செய்வாய்; பிழை செய்வாய்! நானோ இதற்கு நாயகமே!" என்றார். மாணிக்கவாசகர் அவர்தம் வாழ்நிலையில் அடைந்த துன்பங்கள் பலப்பல! ஆனால் ஒருபோதும் மாணிக்கவாசகர் அஞ்சியது இல்லை. அதனால் மாணிக்கவாசகருக்கு இறைவன் கணக்கில் காட்சிகளைக் காட்டியருளியுள்ளான். திருப்பெருந்துறையில் குருந்த மரத்தடியில் ஞானாசிரியன்; மதுரையில் குதிரைச் சேவகன், வைகையாற்றங்கரையில் கொற்றாள்! இங்ஙனம் எத்தனை எத்தனை காட்சிகள்! எனவே, "கணக்கிலாத் திருக்கோலம் காட்டினாய்!" என்றார் மாணிக்கவாசகர்.

மாணிக்கவாசகரின் திருவுள்ளம் பிணக்குகளினின்று விடுதலை பெற்றது. இறைவன் தன் விருப்பம் தன் விருப்பமாகக் கொண்டவரானார்! "வேண்டுவதும் உன் தன் விருப்பன்றே!" என்பது மணிமொழி. அறிவால் சிவனேயாய நிலை மாணிக்கவாசகருக்குக் கிடைத்தது.

பிணக்கி லாதபெ ருந்து றைப்பெரு
மான்! உன் நாமங்கள் பேசுவார்க்(கு)
இணக்கி லாததோர் இன்ப மேவருந்
துன்ப மேதுடைத் தெம்பிரான்
உணக்கி லாததோர் வித்து மேல்விளை
யாமல் என்வினை ஒத்தபின்
கணக்கி லாத்திருக் கோலம் நீ வந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே

(திருக்கழுக்குன்றப் பதிகம் – 1)

(தொடரும்)

கானல்வரி உவமை

(தமிழாகரர். தெ. முருகசாமி)

செவ்வியல் மொழியாம் நம் செம்மொழித் தமிழின் தலைமைக் காப்பியமாகத் திகழும் நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தின் கதைப் போக்கின் திருப்பத்திற்குக் காரணமாக இருப்பது கானல் வரிக் காதையாகும். இக்கானல்வரிச் சொற்பொருளும் அக்காதைக்கான நிகழ்வுகளும் தொல்காப்பியர் கூறும் நோக்கு என்ற செய்யுள் உறுப்பின் வழி உண்மையறிதலே இக்கட்டுரையின் கருதுகோளாகும்.

கண்களால் பார்ப்பது பார்வை. கருத்தால் பார்ப்பது நோக்கு. இந்த அடிப்படையில் கானல் என்ற சொல் கான் + அல் என்ற சொற்பிரிப்பின் நயத்துடன் இளங்கோவின் நாடகத்தமிழ் தரம் மிக உயர்ந்ததாகக் காணப்படுகிறது. ஏனெனில் பாத்திரங்கள் காலத்தின் சாத்திரங்கள் என்ற கண்ணதாசனின் கூற்றுப்படி இளங்கோவடிகளின் நாடகப் பாத்திரங்கள் பாத்திறம் மிக்கதாய் உயிர்ப்புடன் உலவுகின்றன என்பதற்குக் கானல்வரியைச் சான்றாக உணரலாம்.

கான் என்றால் காடு, மணம், இசை, எழுத்துச்சாரியை என்றெல்லாம் பொருள்படும். வரி என்பதும் கோடு, கடல், இசைப்பாட்டு, அழகு என்றெல்லாம் பொருள்படும். இந்த இருசொற்களைத் தேர்ந்து தெளிந்த நிலையில் கானல் வரியை அமைக்கிறார் இளங்கோவடிகள்.

நெய்தல் நில மக்களின் மீன்பிடி தொழிலால் நறுமணம் இல்லாத புலால் நாற்றத்தின்படி கோவலன் மாதவியாரின் வாழ்வில் மணம் இல்லாத மணம் வீசத்தொடங்கப்போவதன் குறிப்பைக் கட்டியம் கூறுகிறது கானல்வரி.

இருவரும் கடற்கரைக்கு வருகின்றனர். இயற்கைக் காட்சியில் நெஞ்சத்தைப் பறிகொடுத்த இருவரும் இசைப்பாடலை மாறிமாறிப் பாடும்போது இருவரின் பாடுபொருளும் எதிர்எதிர் ஆகிவிட்டன. காவிரி கடலோடு கலக்கும் இயற்கைக் காட்சியின் பின்புலத்தில் கோவலன், மனைவி மாதவிதன் மனம் மகிழ யாழ்மீட்டிப் பாடினான் என்கிறார் இளங்கோ.

பாடலைக் கேட்ட மாதவியின் மனம் தவித்தது. அதனைக் குறிப்பிடும் இளங்கோவடிகள் "மான் நெடுகண் மாதவி மன்னும் ஓர் குறிப்புண்டு

இவன்தன்நிலை மயங்கினான் எனக் கலவியால் மகிழ்ந்தாள்போல் புலவியால் யாழ் வாங்கித் தானும் ஓர் குறிப்பினள்போல் கானல்வரிப்பாடலை நிலத் தெய்வம் வியப்பெய்த நீள்நிலத்தோர் மனம் மகிழப்" பாடினாள் என்கிறார்.

இதில் காணப்படும் மாதவியின் கூற்றோடு கூடிய கவிஞரின் கூற்று ஒவ்வொன்றும் தனித்தனி தகவல்களைத் தருகின்றன.

மருட்சியுடைய மானின் கண்போல மாதவியின் மனக்கண் தடுமாறியது. இந்த மருட்சித் தொடர்ச்சியால் பொய்யாக மகிழ்ந்தவள் போலக் கறுவிய (சினத்துடன்) மனத்தோடே யாழை வெடுக்கென வாங்குகிறாள். இதனால் அவள் இதய சுத்தியோடு யாழை வாங்காத நிலை தெரிகிறது.

பாடல் பாடிய முறையிலும் அவள் கோவலனைப் போலப்பாடாமல் அதாவது மனைவி மகிழப் பாடியது போலல்லாமல் பிறர் மகிழப் பாடுகிறாள். மோகனத்தில் தொடங்கி முகாரியில் முடியும் இசை அரங்குபோன்ற நிலையில் கோவலனின் கானவல்வரித் தொடுப்பும் மாதவியின் முடிப்பும் முரணாகவே அமைந்துவிட்டன.

இச்சூழ்றுச் சூழலின் நுட்பங்களையெல்லாம் ஒன்று கூட்டி உரைக்கும் விதமாக இளங்கோவடிகள் அவ்விருவரின் பிரிவுக்கு ஊழ்வினை யாழிசைமேல் நாடகம் நடத்தியதாக உணர்த்தினார். இந்த வகையில்

யாழிசை மேல்வைத்துத் தன்ஊழ்வினை வந்து
உருத்த தாகலின்
உவவுற்ற திங்கள் முகத்தாளைக் கவவுக்கை
நெகிழ்ந்தனனாய்,

கோவலன் பிரிகின்றான்.

பிறைச் சந்திரன் படிப்படியே வளர்ந்து முழுநிலவாகக் காயும்போது அதன் களங்கம் யாவரும் அறியப் பளிச்செனத் தெரிதல் போல மாதவி தன்னை முழுமையாகக் காட்டிக்கொண்டதன் குறை, பிறரறியுமாறு செய்துவிட்டது.

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம் (706)

என்ற குறட்பொருத்தம் மாதவி பற்றிய இளங்கோவின் உவமை, மதிப்பீடு

செய்யச் சான்றாகிவிட்டது. அவள், தான் சித்ராபதியின் மகள்தான் எனக் காட்டிக்கொண்டவிதமாகவே,

நிலத்தில் கிடந்தமை கால்காட்டும், காட்டும்
குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல். (959)

என்ற குறட்பொருட்கும் பொருத்தம் காணத் தூண்டிற்று எனலாம். ஏனெனில் அரங்கேற்றுக் காதையில் பிறப்பில் குன்றாப் பெருந்தோள் மடந்தை (6) எனப் பாராட்டிய ஒரு குறிப்பு அவள் சேற்றில் பிறந்ததை மறைக்கக் கூறிய இளங்கோவின் தந்திரஉத்தி எனலாம்.

இதற்கேற்பவே அவள்தன் பிறப்புப் பற்றிய அச்சம் அவளுக்கு நெஞ்சில் ஓர் முள்ளாக இருந்து குத்தியதாகவே இருந்த உண்மையை அவள் கோவலனுக்கு எழுதியனுப்பிய மடலில் கண்ணகியாம் குலப்பிறப்பாட்டியொடு இரவிடைக் கழிதற்கு என் பிழைப்பு யாது என வினாவுகிறாள். கண்ணகியைக் குலப்பிறப்பாட்டி என்றதால் தன்னைச் சித்ராபதியின் குலத்தினள் எனத் தெரிந்து நீங்கினானோ என்ற தொனியில் எழுத்தைப் பரிமாறியதென்பது நெருப்பைத் துணியில் மறைத்ததாகிவிட்டது. எனவே மாதவி தன் குலப்பிறப்பின் தாழ்ச்சியை எண்ணி வருந்தியதன் வெளிப்பாட்டையெல்லாம் நன்கு உணர்ந்த இளங்கோ அவற்றின் முடிப்புரையாக முடித்துக்காட்டும் விதமாகவே அவரின் "உவவுற்ற திங்கள் முகத்தாள்" என்ற உவமை பொருத்தமாக அமைந்துவிட்டது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

இதனால் அவளைப் பரத்தமை ஒழுத்தினள் என்பதாகக் காட்டாமல் ஒரோவழி பரத்தமை குலத்தினள் என்பதைக் காட்டாமல் இருக்க முடியாத யதார்த்தத்தை விளங்கியது இலக்கிய உத்தியாக அமைந்துவிட்டது. ஏனெனில் எந்த உவமையும் முழுமையாகப் பொருந்துமாறு இராத நிலையில் ஒருபுடை ஒப்புமையாகக் கூறும் வகையாகவே கூறல், இலக்கண மரபாதலால் அந்தத் தரத்தில் மாதவியின் பரத்தமைப் பண்பாட்டுக்குரியதாக அல்லாமல் எண்ணத்திற்கான குறிப்பை, மட்டும் உணர்த்துவதாக உவவுற்ற திங்கள் முகம் எனப்பட்டது.

இந்நிலையில் நறுமணம் இல்லாத கடற்கானல் போலக் கோவலன் மாதவியரின் மணவாழ்வு - பிரிவில் சென்று முடிந்துவிட்டதாக உணர அவர்களின் கானல்வரிப்பாடல்கள் அமைந்துவிட்டன. காப்பிய வகையில் சிலப்பதிகாரத்தைத் துன்பியல் நாடகமாக உணரக் கோவலன் மாதவியரின் பிரிவு துணை செய்தாலும் அவர்களின் பிரிவால் குறியீடாயிற்று என்பதில் ஐயமில்லை எனலாம். என்னே! இளங்கோவின் உவமைத் தொடர்கள்!

"நாயினுங் கடையேன்" - ஓராய்வுச் சிந்தனை

(தருமையாதீனப் புலவர்.வித்துவான். தா. குருசாமி தேசிகர்)

"தேவாரம் படர்க்கையில் இறைவனைப் போற்றுவது; திருவாசகம் இயற்கை வருணனையின்றி நேரே இறைவனை முன்னிலைப்பகுத்திப் போற்றுவது" என்று திருவாமூர் கொண்ட தருமையாதீனக் குருமணிகள் அருளிய ஆசியுரை சிந்திக்கத்தக்கது. மாணிக்கவாசகர் அருளிய திருவாசகத்தின் சிவபுராணத்தில், "நாயிற் கடையாய்க்கிடந்த அடியேற்குத் தாயிற்சிறந்த தயாவான தத்துவனே" என்று பெருமானை முன்னிலையில் விளித்துப்பாடும் பொருளில் அமைந்த "நாய்" உவமையே நமது சிந்தனைக்குரியது. ஏறக்குறைய 159 இடங்களில், வாதவூரர் வாக்கில் இடம்பெறும் நாய் உவமை நயத்தை ஆராய்வதே நமது சிந்தனை.

அ.மு. சரவணமுதலியார்

பெருஞ்சொல்விளக்கனார், முதுபெரும்புலவர் அமரர் அ.மு. சரவண முதலியார் இந்த நாய் உவமையை நன்கு சிந்தித்திருக்கிறார். அதனை நன்றியுடன் வழிமொழிவதே இச்சிந்தனையாகும்.

"நாயினிடத்துள்ள சிறந்த குணங்கள் என்னிடத்தில் இல்லாமையால் அதனினும் கடைப்பட்டவனாயுள்ளேன்" என்பது முதன்மையாக விளக்கம்.

i. ஆயிரம் பேர் கூடிய கூட்டத்தில் நாய் தந்தலைவனை அடையாளங்கண்டுகொள்ளும் ஆற்றல் உண்டு.

ii. தனக்கு ஒரு பிடி உணவு யார் கொடுத்திருந்தாலும் நாய் அவற்றைக் கண்டு நன்றி பாராட்டும்.

iii. தன்னை வளர்த்தவன் சினங்காரணமாக வேல்கொண்டு குத்தினாலும், சீறிவிழாமல் நாய் வாலைக் குழைத்து நன்றியை உணர்த்தும்.

iV. தன்னைப் பாதுகாப்பவன், ஒரு புலிமீது ஏவினாலும் அதனால் உயிருக்கு ஊறு விளையுமே என்று கருதாமல், புலிமீது பாய்ந்து அவன் கட்டளையை நிறைவேற்றும்.

V. தன்னை யாரேனும் கல்லால் அடித்தால் தன்மீது பட்டுத் துன்புறுத்தியது

இந்தக் "கல்" அல்லவா என்று கருதி, அதனைக் கடிக்காமல், "கல்லை" எறிந்தவன்மீது பாய்ந்து, காரணங்காணும் – தனது ஆற்றலைப் புலப்படுத்தும்.

மக்களிடம் இக்குணம் அரிது

இவ்வைந்து குணத்தொழில்கள் மனிதனிடம் காணப்படுவது மிக மிக அரிது.

i. மக்களில் பலர் தங்கள் தலைவனைத் தெரிந்து தொடர்பு கொள்வதில்லை. சுந்தரர், "தம்மானை அறியாத சாதியார் உளரோ" என்று அடையாளங்காணமுடியாமல் மயங்கி தெரிந்த கூற்றாகும்.

ii. வணங்கத் தலைவைத்து, வார்கழல்வாழ்த்த வைத்தும், இறைவனை நினையாத மக்களைவிட நாய் சிறந்ததல்லவா? நன்றி பாராட்டுதலில்!

iii. பயன்கருதாமல் பரமனை வழிபடும் மக்கள் யார் உளர்? "வீடும் வேண்டா விறலின் விளங்கினார்" என்ற அருளுரைக்குச் சிலரே செவ்விதாவார்.

iv. தந்தலைவன் ஏவியதைச் செய்வது நாய். ஆனால் மக்கள் அருளாளர்கள் கட்டளைகளை – அறவழிகளைத் தவிர்த்து எளியவற்றை மேற்கொண்டு உயிர்க்கு இறுதிதரும் வழிகளைப் பல உயிர்கள் மேற்கொள்கின்றன. "மக்களே போல்வர் கயவர்" என்று வள்ளுவர் இவர்களை அடையாளம் காட்டினார்.

"இளையோன் துரந்த குணில் வாய்ச்செல்லாது
இளையோர்ச் சினவும் விளைவாய் ஞமலியின்
அளியரோ அளியர் என்னை?
ஒளி கொள் காரணம் உன்னா தோரே"

என்பது ஞாமிர்தம் தரும் ஞானமாகும்.

தொடர் சிந்தனை :

இங்ஙனம் நாயின் குணங்கள் மக்களிடம் காணப்படாமையால் மக்கள் நாயினுங் கீழானவராகக் கருதப்படுகின்றனர். இனி "நாயனையேன்" எனத் தம்மை நாய்க்கு உவமிப்பதற்குரிய பொதுத்தன்மை ஒன்றுண்டு. நாய், கக்கிய மிச்சிலைப் புதிதாக ஓர் உணவை உண்பதுபோன்று, சிறிதும் அருவருப்பு இன்றி உண்ணும். வேறு எந்த விலங்கிடத்தும் இதைக் காணமுடியாது.

ஆனால் மக்களாகிய "நாம்" நுகர்ந்த பொருளிலே சிறிதும் வெறுப்பின்றி மேலும் மேலும், அதையே நுகர்கிறோம். இக்கருத்தைப் பட்டினத்தடிகள் ஒருபாடலால் அறியலாம்.

"உண்டதே உண்டும் உடுத்ததே உடுத்தும்
அடுத்தடுத் துரைத்ததே உரைத்தும்
கண்டதே கண்டும் கேட்டதே கேட்டும்
கழிந்தன கடவநாள் எல்லாம்
விண்டதா ரைமேல் அன்னம் வீற்றிருக்கும்
விழவறா வீதிவெண்கடா
அண்டரே போற்றும் அம்பலத்தாடும்
ஐயனே! உய்யு மாறருளே!"

என்ற பாடலால் நாயிடத்தும், நம்மிடத்தும் காணப்படும் பொதுத்தன்மை, நுகர்ந்தபொருளில் வெறுப்புக்கொள்ளாதிருத்தலாம்.

குறிக்கோள் இல்லாதிருத்தல் :

இரண்டாவதாக நாயினிடத்துக் காணப்படும் குற்றம், குறிக்கோள் இல்லாது அலைந்து கொண்டிருத்தலாகும். இதனை மெய்யறிவு பெற்ற அருளாளர்கள் உணர்ந்து தம்மேல் ஏற்றி நமக்குச் செவியறிவு புகுத்திய தேவாரப்பாடல், ஈண்டு சிந்தனைக்குரியது.

"பாலனாய்க் கழிந்த நாளும் பனிமலர்க் கோதைமார்தம்
மேலனாய்க் கழிந்த நாளும் மெலிவொடு மூப்புவந்து
கோலனாய்க் கழிந்த நாளும் குறிக்கோள் இலாது கெட்டேன்
சேலுலாம் வயல்கள் சூழ்ந்த திருக்கொண்டீச் சுரத்துளானே"

இவ்வப்பர் பாடல் "குறிக்கோள்" காட்டும் பாடலாகும். "நாய் சிவிகை ஏற்றுவித்தது போலும்" என்று வாதவூரர் தம்மை ஒப்பிடுவார். தகுதியுடைய ஒருவருக்குச் செய்யக்கூடிய சிறப்பினை, அத்தகுதி இல்லாத ஒருவனுக்குச் செய்துவிடுதலைக் குறிப்பது. அறிவாற்சிவமேயாகிய வாதவூரரே இவ்வாறு அருளுவது நம் மேல்கொண்ட அருளுடைமை ஆகும். இதனைப் பழிமொழிப்பாடல் ஒன்றோடு நிறைவாக்குவோம்.

பெரியோர்க்குச் செய்யும் சிறப்பினைப் பேணிச்
சிறியார்க்குச் செய்துவிடுதல் அதுவன்றோ
நாய்மேல் தவிசு இடுமாறு!

தத்துவப் பேரறிஞர்
டாக்டர்.வை. இரத்தின சபாபதி காலமானார்

தத்துவப் பேரறிஞரான டாக்டர்.வை. இரத்தினசபாபதி அவர்கள் 13.3.2015 அன்று சென்னையில் அவரில்லத்தில் காலமானார். இவ்வறிஞர் பெருமகனார் சென்னைப் பல்கலைக்கழகத்தில் தத்துவத்துறைப் பேராசிரியராகப் பல்லாண்டுகள் பணியாற்றியவர்; சைவ சித்தாந்தத்தில் துறைபோகிய அறிஞர். நம் குன்றக்குடி ஆதீனத்தால் நிறுவப்பெற்ற திருப்புத்தூர்த் தமிழ்ச்சங்கத்தின் தலைமை உறுப்பினராகத் திகழ்ந்தவர். சீலமுடைய வாழ்க்கையினர். நம் அருள்நெறித்தந்தையவர்களால் திருப்புத்தூர்த் தமிழ்ச்சங்கத்தின் வழி "ஞானத் தமிழாகரர்" என்னும் சிறப்புப் பட்டம் பெற்றவர். இத்தகைய பெருமகனாரின் இழப்பு, தத்துவ உலகிற்கும் சைவத் தமிழுலகிற்கும் இட்டுநிரப்ப இயலாத பேரிழப்பாகும். "மக்கள் சிந்தனை" இந்த இழப்பினை எண்ணி மிகவும் வருந்துகிறது. இவரை இழந்து துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆறுதலையும் இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறது.

அறிஞரும் சைவசீலமுடையவருமான வை. இரத்தினசபாபதி அவர்களின் நல்லுயிர் இறைவன் திருவடி நீழலில் இன்புற்றிருக்கப் பிரார்த்திக்கிறது.

– ஆசிரியர்

கவிதாஞ்சலி

ஞானத் தமிழா
கரரென்றும் நல்லோராம்
ஞானமிகு வீரசைவ
வித்தகர்! – ஞான
வைரத்ன சபாபதியார்
வான்முத்தி பெற்றார்
வையகமும் புகழவே
வாழ்ந்து.

– தமிழாகரர். தெ. முருகசாமி

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

திரு. க. சிவாஜி, அவர்கள், (ஓய்வு பெற்ற கூட்டுறவுத்துறை கூடுதல் பதிவாளர்)
எழுதியுள்ள

"கூட்டுறவு இயக்க முன்னோடிகள் வாழ்வும் தொண்டும்"
என்ற நூலிலிருந்து)

1969இல் அடிகளார் தமிழகச் சட்டமன்ற மேலவை உறுப்பினரானார். பதவியேற்பு உறுதிமொழியை கடவுள் பெயரால் எடுக்காமல் மனசாட்சியின் பெயரால் எடுத்துப் பலரது கவனத்தை ஈர்த்தார். ஒரு மடாதிபதி சட்டமன்ற மேலவை உறுப்பினரான வரலாறு தமிழகத்தில் முதன்முதலாக நிகழ்ந்தது. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் சட்டமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்ட பின்னர் மேலவை நடவடிக்கைகளில் அக்கறையுடனும் ஆர்வத்துடனும் அடிகளார் செயலாற்றினார். அரசாங்கத்தின் செயல்பாடுகள், பட்ஜெட் பொதுவான பிரச்சனைகள் என அனைத்தின் மீதும் தனது கருத்துக்களைத் தெரிவித்தார், கல்வி, மேலாண்மை, சுகாதாரம், கூட்டுறவு போன்ற பல அரசுத்துறைகள் மக்கள் முன்னேற்றத்திற்கு எப்படிச் செயல்பட வேண்டும் என்பது தொடர்பாக தனது வாதங்களையும் ஆலோசனைகளையும் வழங்கினார். சட்டமன்ற மேலவையில் அவர் தெரிவித்த சில கருத்துகள் இங்கு குறிப்பிடத்தக்கவையாகும்.

1970-71ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய அடிகளார் உணவு உற்பத்தியைப் பெருக்க விவசாயிகளுக்கு புதிய விவசாயத் தகவல் நிலையங்களை ஏற்படுத்தி நவீன விவசாயத்துறையானது மண்வளத்தைச் சோதனை செய்யும் முறைகளை எளிமைப்படுத்தி, அது எல்லா விவசாயிகளுக்கும் சுலபமாக கிடைக்கும் வகையிலே ஆவன செய்ய வேண்டும் என அறிவுறுத்தினார். மேலும் பல கிராமங்களில் வேலை வாய்ப்பு இருந்தாலும், போதிய வேலைவாய்ப்பு கிடைக்காமல் பலர் இருக்கிறார்கள். ஆங்காங்கு இதுபோன்ற தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் தோன்றியிருக்கின்றன, இருந்தாலும்கூட அவை அதிக அளவில்

வளரத்தக்க விதத்தில் அரசு கவனம் செலுத்தவேண்டும்? என்றார் (Tamil Nadu Legislative council Debates, Vol.LXXXIII, 1970, Page - 183-185).

1970ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு மசோதா (TN Appropriation Bill) மீது பேசிய அடிகளார், "கூட்டுறவுத்துறையிலே கல் உடைப்புத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு வரி விதிப்பதில் இருக்கிற சிக்கலைக் குறிப்பிடுகிறேன். விற்பனையின்மீது வரியை விதிக்கிறவர்கள் அந்தத் தொழிலாளர்களின் நிலையைச் சரியாகப் புரிந்துகொண்டு வரிவிதிப்பதில்லை. கல் உடைப்புத் தொழிலாளர்களுக்குக் கல்லை உடைக்க கூலி கொடுத்து, அந்தக் கல்லின் மேல் 20 விழுக்காடு இலாபம் வைத்து சங்கம் விற்கிறது. ஆனால் வரியோ உற்பத்திக் கூலிக்கும் போடப்படுகிறது. ஆகவே கூலியாகக் கொடுத்த பணத்திற்கும் விற்பனை வரி கொடுக்கக்கூடிய நிலைமை தொழிற்சங்கங்களுக்கு இருக்கிறது. இதை அரசு கவனிக்க வேண்டும். (TamilNadu Legislative Council Debates, vol.LXXXIV, 1970, page - 503) என்று வலியுறுத்தினார்.

1971-72ஆம் ஆண்டு திருந்திய வரவுசெலவு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய அடிகளார், "சோசலிச சமுதாயத்தை ஏற்படுத்த விரும்புகிற நாம் முதற்படியாக கூட்டுறவுத் துறையை விரிவுபடுத்த வேண்டும். அதே நேரத்தில் அந்தத் துறையை ஆழமாகச் சீர்படுத்த முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். அந்தத் துறையை விரிவுபடுத்தவும், செம்மைப்படுத்தவும் அதிக அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒருவரே தொடர்ந்து தலைவராக இருக்கக்கூடாது என்று சொல்லக்கூடிய வாதம் சரியானதாக இருக்க முடியாது. சிறந்த தலைவர்கள் தேவைப்படலாம் அப்படி நெருக்கடியான நேரங்களில் ஒருவரே தொடர்ந்து தலைவராக இருப்பதற்கு எந்த விதமான தடையும் இருக்கக்கூடாது. அதற்கு ஏற்ற முறையிலே சட்டத்தைத் திருத்தியமைக்க வேண்டும். தகுதியானவர்கள் ஒரு தடவைக்கு மேலும் நீடிக்கும்படி வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட ஆட்களின் அறிவு, திறமை, நீடித்துக் கிடைப்பது மிகவும் கடினம். எனவே நல்ல தலைமை கிடைத்தால் அவர்களின் சிறந்த சேவை நீடித்துக் கிடைக்க வேண்டும்" என வலியுறுத்தினார் (TamilNadu Legislative Council Debates, vol.LXXXIV, 1971, page - 541 - 542).

காவிரி நதி நீர்ப்பிரச்சனை தொடர்பான விவாதம் சட்டமன்ற மேலவையில் நடைபெற்ற பொழுது அடிகளார் அதில் கலந்துகொண்டு பேசினார். "காவிரி உணவுப் பிரச்சனை மட்டுமல்ல. தமிழக வரலாற்றோடு கலாச்சாரத்தோடு இணைக்கப்பட்ட ஒரு உயிர்ப்பிரச்சனையாகும். பொதுவாக ஒரு நாட்டினுடைய ஒற்றுமையை உருவாக்கி வளர்ப்பதில் ஆறுகள்தான் மிக முக்கியமான பாத்திரத்தை வகிக்கின்றன. ஆறுகளை சச்சரவிற்குரிய பொருளாக ஆக்குதல், அதற்குரிய முயற்சிகளைச் செய்தல் தேச ஒருமைப்பாட்டிற்கு மிகப்பெரிய கேடுகளை விளைவிக்கும் என்பதை இந்த நாட்டிலே மட்டுமல்ல உலக நாடுகள் வரலாற்றிலேகூட நாம் பார்க்கலாம்" என எச்சரித்தார். இம்மாதிரி பிரச்சனைகள் எந்த மாநிலத்திலேயும் தோன்றாத அளவுக்கு ஒரு மாநிலத்திற்கும் இன்னொரு மாநிலத்திற்கும் இடையே பிரச்சனைகளை ஆராயவும் தீர்த்து வைக்கும் வகையிலே முடிவுகள் கூறவும் உயர்மட்டக்குழு ஒன்றை அமைக்கும் முயற்சியை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார் (TamilNadu Legislative Council Debates, vol.LXXXIV, 1971, page - 541 - 542).

1972-73ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மீது நடைபெற்ற பொது விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய அடிகளார் மக்களைப் பாதிக்கும் பல்வேறு பொதுப்பிரச்சனைகள் குறித்தும் பேசினார். "கல்வித்துறையிலே நமது அரசு நிறைய செல்வழித்தாலும் நம் நாட்டின் கல்வித்தரம் மேலும் உயரும் வகையிலேயே சட்டத்திட்டத்தை அமுல்படுத்த வேண்டும். ஆரம்பப் பாடசாலைகளில் ஆசிரியர் - மாணவர் விகிதாச்சாரத்தின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. ஆகையால் பள்ளிகளின் கல்வித்தரம் மிகவும் குறைகிறது. ஆகவே ஆரம்ப பாடசாலைகளிலேயே ஆசிரியர் / மாணவர் விகிதாச்சாரத்தை ஒரு ஆசிரியருக்கு 30 மாணவர்கள் என்ற அடிப்படையில் அமைக்க வேண்டும்" என்றார். இதுபோலவே, "ஆசிரியர்களுக்கு ஆண்டுதோறும் கோடை விடுமுறை காலத்திலே ஒரு குறுகிய கால மறுபயிற்சித்திட்டத்தை ஏற்படுத்தி ஆசிரியர்களின் தரத்தை மேலும் உயர்த்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்" எனவும் வலியுறுத்தினார் (TamilNadu Legislative Council Debates, vol.LXXXIV, 1970, page - 319 - 320)

திருக்குறள் கருத்துக்களை பாமர மக்களிடம் பரப்ப முயற்சிகள் செய்தார். பாரதியாரிடம் அடிகளாருக்கு அளவற்ற ஈடுபாடு இருந்தது.

மக்களுக்காகப் பாடியவர்கள் வரிசையில் பாரதி தலைசிறந்து விளங்குவதாக அடிகளார் உணர்ந்தார். பாரதிதாசன் மற்றும் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்களிலும் அடிகளாருக்கு ஆழ்ந்த ஈடுபாடு இருந்தது. பட்டிமன்றங்கள் தமிழகத்தில் மிக நீண்ட காலமாக நடந்துவருகின்றன என்ற போதிலும் அதை பாமர மக்களின் பல்கலைக்கழகத் திறந்தவெளி வகுப்பறையாக மாற்றிக் காட்டியவர் அடிகளார்.

சைவ மதத்தை தழுவிய ஒரு சைவ சோசலிச சமுதாயம் ஒன்றை அமைக்க அடிகளார் விரும்பினார். "சமயம் சார்ந்த வாழ்க்கையே சரியானது எனவும் வாழ்க்கை சமயச் சார்பு இல்லாத வாழ்க்கை கவலை வாழ்க்கை எனவும் கருத்துக் கொண்டவர். எந்த ஒரு தத்துவமும் ஆதிக்கத்தை மையப்படுத்திய நிறுவனமாக மாறிவிட்டால் சமயச் சண்டை என்ற பெயரில் ஆதிக்கச்சண்டை என்ற விபத்துக்கு ஆளாவதைத் தவிர வேறு வழியில்லை" என்றார்.

ஒரு மடாதிபதியாக இருந்துகொண்டு சோசலிசம் பேசினார். மடாதிபதியான அடிகளாருக்கு கடவுள் மறுப்புக் கொள்கையைக் கொண்ட பொதுவுடைமைக் கருத்துக்கள் எங்ஙனம் அடிகளாரைக் கவர்ந்தது? பொதுவாக இந்திய தத்துவ மரபுகள் அனைத்திலுமே ஆழ்ந்த ஞானம் உள்ளவர் அடிகளார், தேவகோட்டையில் கே.எம்.சுப்பையா எனும் கம்யூனிஸ்ட் தோழர் இருந்தார். இவர் அடிகளார் மீது அளவற்ற ஈடுபாடு கொண்டவர். இவரது தொடர்பால் அடிகளார் தமது பொதுவுடைமைச் சிந்தனைகளை வளர்த்துக்கொண்டார். ஜீவாவின் தொடர்பும் கிடைக்கப்பெற்றார். மார்க்சியத்தின் எந்த எந்தக் கூறுகள் சைவத்துக்கு உகந்தவை என்று ஜீவாவும் தேடித்தேடிச் சென்று சேகரித்து தத்தம் தத்துவங்களைச் செழுமைப்படுத்தினர். (பொன்னீலன், 1996, பக்கம் – 88)

மார்க்சியக் கொள்கைகள் பலவற்றுடன் உடன்பாடு கண்டார். 1971இல் சோவியத் யூனியன் சென்றார். ஏழம் நூற்றாண்டிலேயே சோசலிசத்தை ஒத்துக்கொண்டது சைவம் என தனக்கும் சோசலிசத்துக்கும் உள்ள உறவிற்கு வரலாற்றுச் சான்று பகர்ந்தார். கம்யூனிஸ்ட் தலைவர்களுடன் நெருங்கிப் பழகினார். ஜீவாவுடன் பழகினார். அறிஞர் அண்ணாவிடமும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார்.

1982இல் குமரி மாவட்டத்தில் மதக்கலவரம் நடைபெற்றபோது நேரில் சென்று சமாதான முயற்சிகளில் ஈடுபட்டு அமைதி நிலைபெறச் செய்தார்.

அடிகளார் தமது வாழ்நாளில் அனைத்து வகையான ஆதிக்கங்களையும் எதிர்த்தார். நாட்டாதிக்கம், மொழியாதிக்கம், சாதியாதிக்கம், மத ஆதிக்கம் இப்படி எல்லாவிதமான ஆதிக்கமும் தவறு என்றார் (பென்னீலன், 2003, பக்கம் - 180). இவரின் இத்தகைய ஆதிக்க எதிர்ப்புணர்வே இவரது கூட்டுறவுச் சிந்தனைகளுக்கு வலுச்சேர்த்திருக்க வேண்டும். ஏனெனில் கூட்டுறவு இயக்கச் சித்தாந்தங்கள் ஆதிக்கத்தையும் அதனால் விளையும் சுரண்டல்களையும் களைந்திடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

கூட்டுறவுத் தத்துவங்களில் மிகுந்த நாட்டமுடையவர் அடிகளார். இதற்கு அடிகளாரது பின்வரும் வரிகளே சான்று பகர்கின்றன. "ஒரு செங்கல்லை மற்றொரு செங்கலுடன். சாந்து பூசி பிணைத்தால்தான் கோபுரம் கட்டமுடியும். அதுபோல மனிதர்களும் ஒருவருக்கொருவர் ஒட்டுதலும், பிணைப்பும், உதவியுடனும் வாழ்ந்தால்தான் ஒரு கூட்டுறவு அமைப்பை உருவாக்கி சமுதாயத்தில் கோபுரம்போல் உயர்ந்த நிலையை அடைய முடியும். மேலும் கோபுரத்திலுள்ள ஒவ்வொரு செங்கல்லும் எவ்வாறு அதுவும் நின்று பிற செங்கற்களும் நிற்க இணைப்பையும் பலத்தையும் கொடுக்கின்றதோ அதுபோல் மக்களும் தாமும் நிலைத்து பிறரும் வாழ உறுதுணையாக இருக்கவேண்டுமானால் அதற்கு கூட்டுறவு ஸ்தாபனங்கள்தான் சிறந்தவை", (தவத்திரு குன்றக்குடி அடிகளார், கூட்டுறவு, டிசம்பர், 1974, பக்கம் 13) கூட்டுறவுத் தத்துவங்களை சாதாரண மக்களும் புரிந்து கொள்ளும் எளிய மொழியில் எடுத்துச் சொன்னார். சமதரும சமுதாயம் ஏற்பட கூட்டுறவு அடித்தளம் அமைக்கும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தார். சோவியத் யூனியன், சீனா போன்ற நாடுகளுக்குச் சென்று கூட்டுறவுச் செயல்பாடுகளை நேரில் கண்டுணர்ந்து வந்த அடிகளார் கூட்டுறவு முறையில் மக்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் குன்றக்குடியில் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்தார்.

(தொடரும்)

அறுபடை வீடு அழகிய வீடு

(ரெ.க. இராமானுஜம்)

அறுபடை வீடு அழகிய வீடு
அறுமுகம் கொண்ட அழகனின் வீடு
திருப்பரங் குன்றினில் தெய்வ யானையைத்
திருமணம் புரிந்த திருமால் மருகா
குறமகள் வள்ளி கரத்தினைப் பிடித்தே
முறையுடன் மணந்த வேட்டுவர் தலைவா
கருணை யாளனே கார்த்தி கேயனே
சரவணா குமரா சிவனின் செல்வா
கடம்பா கந்தா கணபதி தம்பியே
வடிவேல் முருகா வையக வேந்தா
பழமுதிர் சோலை மலைதனில் வாழும்
அழகு மயில்வா கனனே குகனே
பழம்நீ முருகா பார்வதி மைந்தா
பழனி முருகா பைந்தமிழ்த் தலைவா
மந்திரம் சொன்ன வானவர் தலைவா
செந்தூர்ச் சேந்தனே சிங்கார வேலனே
திருவாய்த் திகழும் சுவாமி மலையில்
வருவோர்க் கெல்லாம் வரம்தரும் முருகா
திருத்தணி முருகா தேவாதி தேவா
தருவாய் உந்தன் தரிசனம் எமக்கே
திருவடி மலரினை தினமும் தொழுவோம்
அருள்புரி வாய்நீ அடியவர் தமக்கே!

குன்றை வருக்க வெண்பா

(அழ. முத்துப்பழனியப்பன்)

முருகனைப் போற்றித் துதிப்பது, புலவர்க்கு மிகவும் பிடித்தமான ஒன்று. கேட்பதை எல்லாம் கொடுக்கும் பேரருளாளன் அவன். அப்படி குன்றக்குடியில் உறையும் குமரேசனை மிகவும் எளிய இன்சொலால், ஒரு புலவர் போற்றித் துதிக்கின்றார்.

வருக்க வெண்பாஎன்பது அகர வரிசையில் பாடப்படும் இனிய அரிய நூல்.

இதை இயற்றியவர் குமாரசாமிக் கவிராயர் என்பவர். இவர் மிதிலைப்பட்டி அழகிய சிற்றம்பலக் கவிராயர் மரபினர். இவர்களது இல்லத்தில்தான், சிலப்பதிகாரக்காப்பியத்தின் மூலம் முழுப் பிரதியும் கிடைத்தது. உ.வே.சா இவர்கள் இல்லத்தை "தமிழ்க்கோயில்" என்று போற்றுவார். குன்றக்குடி ஆதீனத்தால் போற்றப்பட்ட புலவர் குடும்பங்களில் இவர்கள் குடும்பமும் ஒன்றுஆம்,

முருகனே பஞ்சாமிர்தம் :

முருகனுக்குப் பிடித்தது பஞ்சாமிர்தம். இதில் ஐந்து பொருட்கள் சேர்ந்திருக்கும். அவை சர்க்கரை, தேனுடன், வாழை, பலா, மாம்பழம் ஆன முக்கனிகளை மிகவும் கவனமாகச் சேர்த்தால் அது அதிக ருசி தரும். "ஐந்துணா" அல்லது பஞ்சாமிர்தம். அதுபோல, கந்தன், குகன், கடம்பன், கார்த்திகேயன், முருகன் இவை ஐந்து பெயர்களும் எனக்கு அதிக ருசியை தருவதாகும் என்கிறார்.

1. *"சர்க்கரை, தேனோடு ஆகச் சார்பான முக்கனியும்*
அக்கரையாய்ச் சேர்க்கில் அதன்ருசிபோல் - எக்காலுங்
கந்தன், குகன், கடம்பன், கார்த்திகேயன், முருகன்
ஐந்தாம் ருசி எனக்கே யாம்"

"கூட்டில் பறவைபிடித்து அடைத்து மகிழ்வோரும் ஊன்உணவு உண்போரும் நன்றாக வாழ்கிறார்களே? இதுநன்றா? உன்பெயரைச் சொல்வோர் துயரப்படக் கூடாது பெருமானே" என்கிறார் இன்னொரு பாடலில்.

2. *"கூட்டில் பறவைதனைக் கொணடு அடைத்தோர், ஊன்பொசித்தோர்*
நாட்டில் சிலாக்கியவான் ஆவ தென்ன? - தாட்டிகமாய்
கந்தா, முருகா, கடம்பாஎன் பார்கள்தினம்
சிந்தா குலப்படல் என் செப்பு"

கௌவை சொல்லி வாழும் கசடர்கள் நன்றாகஇருக்கிறார்களே, என் வறுமை நீங்க அருள்வாய் என்கிறார். அந்தப்பாடல் இதோ;

3. "கௌவை சொல்லி வாழும் கசடர்கள் நன்றாக
செவ்வை யுள்ளார் எல்லோர்க்கும் சீர்குறைவு – தௌவை
அகலக்கிருபை அருள்வாய் முருகேசா
சகலர்க்கும் செல்விவரச் சாற்று"

தௌவை = மூதேவி,

ஞான வழியுந் தெரியாது மோன வழியும் தெரியாது, ஆனால் குன்றக்குடிக் குமரேசா, நான் உன் தொண்டன், எனக்கு நலம்தா என்கிறார் இன்னொரு பாடலில்

4. "ஞானவழி யுந்தெரியேன் நாதா! சரவணா!
கானக் குறமின்மேற் காதலாய் – ஆனந்தங்
கொண்டணைந்த குன்றைக் குமரேசா!....
தொண்டன் ஐயா, நீதா சுகம்".

உன்னுடைய நாமத்தை என் நெஞ்சில் தைத்து விட்டேன் எனக்குத் துயரம் வேண்டாம் என்கிறார் வரும் பாடலில்.

5. "தொந்தர(வு) ஏன்? பந்தத் துயரேன்? முருகேசா
சந்தமுடன் நற்கவியாயச் சாற்றலுடன் – அந்திசந்தி
உச்சியிலும் நின்தாளை உன்னுவேன்! என்னுளத்தில்
தச்சிருக்கு நின்னாமம் தான்"

என் குற்றத்தைக் களைவீர், குறையாத செல்வம் வழங்குக என் சுற்றம், குழந்தைகட்கும் நன்மை தருவீர், நற்றமிழை ஆய்ந்துகூறும் எனக்கு யாருமில்லை. நின் திருவடியைத் தருவீராக என்கிறார் கவிராயர். அடுத்து,

6. "குற்றம் களைவீர், குறையா நிதி தருவீர்,
சுற்றம் சுதர்க்குச் சுகம் தருவீர், – நற்றமிழால்
கூறுமடியேற்குக் கொடுப்பீர் இருதாளை
ஆருமிலேன் கந்தா அருள்"

இவ்வாறு மிக எளிமையாய், மிக அருமையாக மிக உருக்கமாய், அமைந்துள்ளது குமாரசாமிக் கவிராயர் இயற்றிய குன்றக்குடி வருக்க வெண்பா,

இந்நூல் முருகனடியார்க்கு இன்னும் ஒரு அருமையான பாராயண நூல், குன்றக்குடி முருகனைப் போற்றுவோர், அவனை நினைந்து இப்பாடல்களைப் பாடும்போது அவனருள் கிடைக்கும் என்பது திண்ணம்.

மக்கள் சிந்தனை

உரிமை – பதிப்பு அறிக்கை

1.	இதழின் பெயர்	:	மக்கள் சிந்தனை
2.	மொழி	:	தமிழ்
3.	வெளியீடு	:	திங்கள் இதழ்
4.	வெளியீடு இடம்	:	குன்றக்குடி – 630 206
5.	ஆசிரியர்	:	**மரு. பரமகுரு**
	உரிமை	:	திருவண்ணாமலை ஆதீனம்,குன்றக்குடி
6.	பதிப்பாளர்	:	**பழ. பாண்டித்துரை**
	அச்சகம்	:	சண்முகநாதன் அச்சகம்; மேலரதவீதி, குன்றக்குடி.
7.	பதிவு	:	செய்தி இதழ்

மேற்கண்ட விவரம் யாவும் உண்மை என்றும், நம்பத் தகுந்தவை என்றும் உறுதி கூறுகிறேன்.

நாள் : 1.4.2015

மரு. பரமகுரு

அன்பான வேண்டுகோள்!

சமுதாய மாமுனிவராகத் திகழ்ந்த நமது அருள்நெறித் தந்தை தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் ஆழமான சிந்தனைகளை அடியொற்றி நடைபோடும் "மக்கள் சிந்தனை" மாத இதழ் மேலும் பலம் பெறுவதற்குத் தங்களின் ஆதரவு தேவை. நமது கருத்து பரவலாக மக்களைச் சென்றடைய இதழ் அவசியம்.

ஆயுள் சந்தாவாகவோ, அல்லது ஆண்டுச் சந்தாவாகவோ அல்லது புரவலர் தொகையாகவோ மக்கள் சிந்தனை இதழுக்கு வழங்கி மக்களின் சிந்தனைகளை அகம்கொண்டு வெளிவர உதவுங்கள். "மக்கள் சிந்தனை"யின் பணி சிறப்புடன் தொடர வாசகராக, படைப்பாளராக சந்தாதாரராக விளம்பரதாரராக மாறுங்கள்; இன்றே சமய சமுதாயப் பணியை வலிமைப்படுத்துங்கள்.

– **ஆசிரியர்**

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

(உலகத் திருக்குறள் பேரவை - புதுக்கோட்டை மாவட்டக் கிளையின் சார்பில் செந்தூரான் தொழில் நுட்பக் கல்லூரியில் 3.2.2015-ஆம் நாள் நிகழ்ந்த திருவள்ளுவர் திருவிழா - பாட்டரங்கில் பாடியது.)

(புலவர். **நாவை சிவம்**)

தமிழ் - சமய - திருக்குறள் பணிகள்

6. தேன்தமிழின் ப்ாதுகாப்பு மாநாடும் கண்டார்!
தெய்வீகப் பேரவையும் இவர்தொடங்கி வைத்தார்!
கூன்விழுந்த சமுதாயம் நிமிர்ந்தெழுவ தற்கே
குறைபோக்கும் உழவாரத் திருப்பணியும் செய்தார்!
வான்புகழும் திருக்குறட்கே பேரவையும் கண்டார்!
வளர்கின்ற தலைமுறைக்கே வழிகாட்டி நின்றார்!
கோனெனவே திருக்குறளைத் தேசியநூ லாக்கக்
குரல்கொடுத்த முன்னவரும் நம்மடிக ளன்றோ?

7. சாதிகளால் மதங்களினால் சண்டையெலாம் தோன்ற
சதிகாரர் வெறிச்செயலால் பலரிங்கே மாண்டார்!
தீதுசெயும் தீண்டாமைக் கொடுமைகளால் காதல்
திருமணத்தைச் செய்தவர்கள் துன்பமிக வுற்றார்!
ஈதறிந்த நம்மடிகள் மண்டைக்காடு சென்றார்!
இனிமைதரு நல்லமைதி நல்லிணக்கம் கண்டார்!
ஏதமிலா பிறப்பொக்கும் உயிர்க்கெல்லாம் என்றே
எடுத்துரைத்தார்! சமத்துவமாம் சிந்தனையை வார்த்தார்!

8. அடுத்தவரின் துன்பத்தைப் போக்காமல் நின்றால்
அறிவிருந்தும் என்னபயன்? யாதுமிலை என்றே
எடுத்துரைத்த வள்ளுவந்தான் நம்மடிகள் நெஞ்சில்
எத்தனையோ அறப்பணியை செய்வித்த தென்பேன்!
படித்திடவே முடியாத சிறுவர்க்குக் கல்வி
பசிவயிற்றின் ஏழையர்க்கே உணவளித்த பாங்கு!
வெடித்துவந்த வாழ்வியலின் சிக்கலிருள் போக்கி
வெளிச்சத்தைப் பலர்காண அடிகளன்றோ செய்தார்!

இயற்கைப் புயல் – சீனப்போர் – உதவிழ்

9. இயற்கையினால் ஏற்பட்ட புயல்வந்த போதும்
இருநாட்டின் எல்லைப்போர் நிகழ்ந்திட்ட போதும்
மயங்காமல் உடனெழுந்தே துன்பத்தைப்போக்க
மக்களிடம் பொருள்தண்டி உதவிசெய லானார்!
அயல்நாட்டுச் சுற்றுலாவாய் நாடுபல சென்றார்!
அங்கிருந்த வாழ்க்கைதொழில் நுட்பமெலாம் ஆய்ந்து
தயங்காமல் நம்நாட்டில் அறிவியலின் ஆக்கம்
தழைத்திடவே தனிமையம், மாநாடும் கண்டார்!

ஊராட்சித் தலைமைப்பணி

10. சிற்றூரைத் தத்தெடுத்தே வேளாண்மை ஓங்க
செய்தொழிலும் வேலைவாய்ப்பும் பெருகிடவே செய்தார்!
பற்றுடனே ஊராட்சித் தலைமையினை ஏற்றார்!
பயிர்வகைகள், கால்நடைகள் வளர்ச்சிபெறச் செய்தார்!
தொற்றுநோயாம் மதுக்குடிப்பும் சூதாட்ட மெல்லாம்
தொடராமல் குன்றக்குடி பெருமையினைக் காத்தார்!
முற்றும்ஊர் தன்னிறைவு பெறக்கனவு கண்ட
முதல்துறவி அடிகளெனில் மறுப்பாரும் உண்டோ?

திருக்குறள் எழுத்துப்பணி – திருவள்ளுவர் விருது

11. சிந்தனையாம் பழமுதிர்க்கும் சோலையென நின்று
சீர்மைமிகு தமிழகமாம், குறளியமாம், நன்மை
தந்தவள்ளு வர்வழியாம் திங்களிதழ் மூலம்
தவமுனிவர் திருக்குறட்கே விளக்கவுரை தந்தார்!
சிந்துபுகழ் பெருமைக்கும் சிறுமைக்கும் செய்யும்
செயல்கள்தாம் காரணமாம் என்றகுறட்பேற்ப
முந்துதமிழ் நாட்டரசால் வள்ளுவரின் பேரால்
முதல்விருதை நம்மடிகள் பெருமையுடன் பெற்றார்!

காலம் போற்றல் – பட்டிமன்றச் சிறப்பு – பாரிவிழா

12. சிறப்புரைதாம் ஆற்றுதற்கே மகிழுந்தில் வந்தார்!
சிறுபழுது வண்டிக்கே நேர்ந்திட்ட போதும்
பொறுப்புடனே மிதிவண்டி தனில்ஏறிச் சென்று
பொழிவாற்றிக் காலத்தின் சீர்பேணி நின்றார்!

தெறிப்பான பட்டிமன்றத் தீர்ப்புரைகள் தந்தார்!
தீந்தமிழின் கொடைவள்ளல் பாரிவிழா கண்டார்!
குறிப்பிட்ட மதமின்றி பலமதத்தார் போற்றும்
குன்றக்குடி அடிகள்தான் வரலாறாய் நின்றார்!

இறைப்பணி – சமுதாயப்பணி

13. தெள்ளுதமிழ் நாயன்மார் ஆழ்வார்கள் செய்த
திருப்பணிக்கு மேலாக இறைத்தொண்டும் செய்தார்!
வள்ளலாரும் பாரதியும் பாவேந்த ரெல்லாம்
வழங்குநெறி போற்றிநின்றார்! காரல்மார்க் சாரின்
விள்ளரிய பொதுவுடைமை நெறிபோற்றி நின்றார்!
வீழ்ச்சியுறு தமிழகத்தில் எழுச்சிபல தந்த
அள்ளுபுகழ்ப் பெரியாரின் பகுத்தறிவில் தோய்ந்த
அருளாளர் நம்குன்றக் குடியடிகள் அன்றோ?

14. அருள்நெறியின் தந்தையென வழிகாட்டி நின்றார்!
ஆன்மிகத்தின் அறிவியலின் சிறப்புரைத்து வென்றார்!
தெருள்நிறைந்த கதை, மடல்கள், நாடகம்பா தந்தார்!
தேர்ந்தவர லாற்றுடனே இலக்கியங்கள் தந்தார்!
பொருள்துலக்கும் குமுகநலம் மலர்விக்க வேண்டி,
பொதுமையறச் சிந்தனைகள் தந்திட்டார் யாண்டும்!
இருள்விலக்கும் ஒளிக்கதிர்போல் குன்றக்குடி மூலம்
எழுச்சிதந்த தமிழ்முனிச்சீர் அறியட்டும் ஞாலம்!

நிறைவு

15. துவராடைத்துறவியாரின் பொதுமை நல உள்ளம்
சுடர்அறிவால் புதுப்புரட்சி செய்ததமிழ் வெள்ளம்!
சுவை ஒழுகும் அருவியென கருத்தடர்ந்த பேச்சு!
சொக்கவைக்கும் படைப்புக்கள் குமுகவாள் வீச்சு!
உவகையுடன் உழைத்தால்தாம் வள்ளுவமே வெல்லும்
ஊரெல்லாம் குறளியக்கம் இவர்பெயரைச் சொல்லும்!
தவப்பெரியார் யார்வருவார் அடிகள்போ லிங்கே
தமிழ்க்குறளைப் போற்றிவாழ்தல் நம்பெரிய பங்கே!

அருட்செல்வர் வாழ்க பல்லாண்டு

(கவிச்சுடர். அழகுதாசன்)

"தோன்றிப் புகழொடு தோன்றுக" – என்னும்
குறள்நெறி நூலானார் – தமிழ்த்திருப்
பணிக்கெனத் தோளானார்!
என்றும் தமிழ்மொழி எல்லாம் தமிழ்மொழி
கல்வியில் வேண்டுமென்றார் – தாய்மொழி
கற்றிடல் வேண்டிநின்றார்!

நாச்சி முத்துவின் நல்லதோர் மகனாய்
வள்ளலார் பிறந்துவந்தார் – அருட்செல்வர்
வள்ளலாய் விளங்கிவந்தார்!
மூச்சும் பேச்சும் ஒன்றே என்ற
சன்மார்க்க சங்கமானார் – வள்ளலார்
நன்னெறிக்கொள் கையானார்!

பைந்தமிழ் மொழியில் பண்ணிசை வளர
இசைத்தமிழ் விழாவெடுத்தார் – தமிழரின்
இதயத்தில் இடம்பிடித்தார்!
எண்ணம் தமிழாய்ச் செயலில் காந்தியாய்
முகத்தைப் பதித்துவிட்டார் – வரலாறில்
முத்திரை படைத்துவிட்டார்!

மகான்கள் பிறந்திட நதிகள் இணைந்திட
தவமே மேற்கொண்டார் – பாரதம்
செழிப்பாய்மாறுமென்றார்
மகாத்மா வாகப் பாரதி யாக
வான்புகழ் பெற்றென்றும் – அருட்செல்வர்
வாழ்கவே பல்லாண்டு!

முனைவர்.நயம்பு அறிவுடை நம்பிக்கு "திருக்குறள் ஆய்வுச்சுடர்" விருது

உலகத்தமிழராய்ச்சி நிறுவனத்தில் 24.01.2015 அன்று நடைபெற்ற "திருக்குறள் தேசியநூல்" புத்தக வெளியீட்டு விழாவில் தமிழ்த்தாய் அறக்கட்டளை சார்பில் உடையார்கோயில் குணாவும்,உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் கோ.விசயராகவன் அவர்களும் இணைந்து முனைவர் நயம்பு அறிவுடைநம்பி அவர்களுக்கு "திருக்குறள் ஆய்வுச்சுடர்" விருது வழங்கினர். தமிழ்வளர்ச்சி இயக்குநர் முனைவர் கா.மு.சேகர் தலைமையில் நடைபெற்றது.

சிறப்பாசிரியருக்கு

அடிகளார் பெருமகனாருக்கு,

ஆசிரியர் திருப்புவனம் வாசுதேவனின் அன்பான வணக்கம். நலம், நலமே விழைகின்றேன், 1.4.2015 அதிகாலை கோடைப் பண்பலை வானொலியில் கல்விபற்றி "விடியல் சிந்தனையில்" தங்களின் உரை கேட்டு மகிழ்ந்தேன். மிகவும் அற்புதமான அதிகாலை வேளையில் அனைவரும் பின்பற்றப்படவேண்டிய ஒழுக்க நெறியை கேட்க உதவினீர்கள் தங்களுக்கும், கோடைப் பண்பலைக்கும் நேயர்கள் சார்பில் நன்றி.

கல்வி என்பது ஒழுக்கத்துடன் கூடியதாக அமைந்தால் மட்டுமே அந்தக் கல்வியால் மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் நன்மை விளையும். அதைத் தவிர்த்து வியாபார நோக்கமாகவும், மனனம் செய்ததை பேப்பரில் எழுதினோம். மதிப்பெண் பெற்றோம் என்றே மாறிவருவது வேதனைக் குரியது. ஆரம்ப நிலைப்பள்ளிகளிலும், நடுநிலை, உயர்நிலை வரை நீதி போதனை வகுப்புகள் தற்போது நடைமுறையில் இல்லாததும் அவற்றைப் போதிக்க ஆசிரியர்கள் விரும்பாமையும் கூட ஒரு காரணமாகச் சொல்லலாம், தற்போது நடந்து முடிந்த +2 தேர்வு மையங்களில் கடைசித் தேர்வு முடிந்து மாணவர்கள் வெளியேறும்போது காவல் துறையினர் பெருமளவில் குவிக்கப்பட்டு அமைதியாக வெளியேறச் செய்யும் வேதனையான சூழலில்தான் கல்வி சென்று கொண்டிருக்கிறது. பெற்றோரும், ஆசிரியரும் இணைந்து நல்லமுறையில் நல்ல சமுதாயம் அமையவேண்டும் என நினைத்துப் போராடினால் எதிர்கால சமுதாயம் நல்லவிதமாக அமையும் என்பது எனது பணிவான கருத்து. தொடர்ந்து

இதுபோன்ற நல்ல சிந்தனைகளை ஊடகங்களின் வாயிலாக தங்களைப் போன்ற ஆன்றோர் அறிவுறுத்தவேண்டும். அது நமது சமூகக் கடமையும் கூட. நன்றி!

– G. வாசுதேவன்

அய்யாவின் பொற்பாதங்களுக்கு தங்களின் தமிழ் பக்தன் துரை.வீரப்பனின் பணிவின் வணக்கங்கள்!

மார்கழியில் 100.5ல் கோடைப் பண்பலையில் என்னைத் தமிழ் மழையில் நனைய வைத்தீர்கள். இப்போது "விடியல் சிந்தனையில்" இதயத்தை துடிக்க வைக்கிறது. தங்களின் தேன் தமிழ்!

4.4.2015ல் துறவு பற்றிக் கூறிய கருத்து என்னைப் பொறுத்தமட்டில் உரை நிகழ்த்துவதில் தாங்களுக்கு நிகர் தாங்களே!

பரதன் – கம்பன் காட்டியது

அலெக்சாண்டர் – தலைக்கனம் வென்றது.

வள்ளுவன் கூறிய வாய்மொழி..... அப்பப்பா எவ்வளவு நூல்தான் படித்துள்ளீர்கள். தங்கள் இதயமென்ன உள்ளமா.... அல்லது கரைகாணாச் சமுத்திரமா? தாங்கள் பரமன் மைந்தன் பழனிமுருகன் திருவருளால் நீடூழி வாழவேண்டும்! தங்களால் தமிழும் சேர்ந்து வாழட்டும்!

"குன்றக்குடி பெற்ற மன்றத் தமிழே!

குன்றில் இட்ட விளக்காய் தங்கள் புகழ் திகழட்டும்....!

வாழிய பாரதம் – வாழிய செந்தமிழ்! – வாழிய பொன்னம்பலத்தார்!"

என்றென்றும் நன்றியுடன் தங்கள் தமிழ்பக்தன்!

– துரை. வீரப்பன், செவல்பட்டி

குருமகா சந்நிதானம் பொன்னார் திருவடிகளை வணங்கி மகிழ்கிறேன். வாழ்க. நீடு வாழ்க. கடந்த 28.03.2015 அன்று சென்னையில் நடைபெற்ற பழநியப்பா பிரதர்ஸ் "திருவருட்பா" நூல் வெளியீட்டு விழாவில் தங்களது உரையைக் கேட்கும் நற்பேறு பெற்றேன். வெகு அருமை. மிகச் சரியான உதாரண வரலாற்று நிகழ்வுகள். சிறு சிறு கதை விளக்கங்கள் என உரை கேட்பவரின் மனதிற்கு நிறைவையும், செவிகட்கு இன்பத்தையும் தந்தது. மீன், வண்டு, பறவை, விலங்கு மாய்தல் பற்றிய இச்சை உணர்வு குறித்துப் பேசிய விதம் வெகு அருமை. அலெக்சாந்தர் தன்குழுவிடம் உரையாடிய விதம் ஆழ்ந்து

நோக்கற்பாலதாக அமைந்து இருந்தது.

29.03.15 காலை திருவாசக மணி திரு. K.M.B. அவர்களின் திருவாசக ஆங்கிலமொழி பெயர்ப்பின் இரண்டாம் பதிப்பு விழாவிலும் தங்களின் உரை வெகு நேர்த்தி. அவரது உரையைப் பாராட்டிய (57 ஆண்டுகட்கு முன்னர்) பேரறிஞர்களின் உரையை மேற்கோள்காட்டித் தாங்கள் பேசியதும் வெகு சிறப்பு. இரண்டு நாள் உரையிலும் ஒன்றை ஒன்றை தொடாமல் கூறியது கூறாமல் தாங்கள் பேசிய விதம் என்னை வியப்பில் ஆழ்த்தியது. எளியேன் கடந்த 39 ஆண்டுகாலமாக இலக்கிய விழா நடத்தும் பொறுப்பில் இருப்பதால் இலக்கியவிழா நடத்தும் பொறுப்பில் இருப்பதால் பலநூறு அறிஞர்களின் உரையைச் செவிமடுத்து இருக்கிறேன். எனினும் தங்களின் உரை இளந்தென்றலாக, கருத்துக் குவியலாய் வீசியது. வாழ்க நீடு வாழ்க.

ஒரு நூறு ஆண்டுகள் வாழ்ந்து மானுடம் வளர, வாழ வழி காட்டுங்கள்.

- தி.சீநீ. தியாகராசன்
"சிவாலயா" சென்னை-4

வணக்கத்துக்கும்-வழிபாட்டுக்கும்-உரிய தவத்திரு குன்றக்குடி குருமகாசந்நிதானம் அவர்களின் திருவடிகளுக்கு,

வணக்கம்,

நமது அன்பான அழைப்பினை ஏற்று சென்னையில் 29.03.2015 ஞாயிற்றுக்கிழமை காலையில் நடைபெற்ற அருட்செல்வர் ஐயா அவர்களின் 93-வது பிறந்தநாள் பெருமங்கல விழாவுடன் இணைந்து நடைபெற்ற திருவாசக ஆங்கில நூல் வெளியீட்டு விழாவிற்கு, தாங்கள் மனமுவந்து வருகை தந்து, நிகழ்ச்சிக்கு தலைமையேற்று சிறப்பு செய்தமைக்கு மனங்கனிந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

சமய சமுதாய உலகில், உலக அரங்கில் குன்றக்குடியின் பெருமையை உயர்த்தியவர்கள்! பெரிய குருமகாசந்நிதானம் அவர்கள். பெரிய சுவாமியைப் போலவே தாங்களும் புன்னகைப் பொலிவுடன் மேடைகளில் அற்புதமாக முழங்குகிறீர்கள்.

செயல்பாடுகளைப் பல மடங்கு விரிவுபடுத்தியருக்கிறீர்கள். குன்றத்தின் பெருமையை உயர்த்திவருகிறீர்கள். தங்களால் எண்ணற்ற இளைஞர்கள் எழுச்சி பெறுவார்கள். தொண்டே துறவு என்று பொருள் கொண்டுள்ள குருமகாசன்னிதானம் அவர்களின் அருள் வாழ்த்துக்கள் எங்களை மேற்கொண்டு உணர்வுடனும், உற்சாகத்துடனும் பணிபுரிவதற்கு ஊக்குவிப்பதாக அமையும்.

தாங்கள் மகிழ்வுடன் எழுந்தருளியமைக்கு மீண்டும் நமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

- ஜெ. மோகன்

சிவாலயம், சென்னை-4

அருட்திரு சரவண சுவாமிகள்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இவர், மயிலாப்பூர் நம் கிளை மடத்தில் பணியாற்றியவர். சென்னைக் கடற்கரைப் பகுதி மக்களுக்குச் சமய அறிவூட்டியதுடன் பச்சிலை மருத்துவம் மூலம் நோய் தீர்த்த புண்ணியர். யாழ்ப்பாணம் நல்லூர் ஆறுமுக நாவலர் அவர்கள் சபாபிரசங்க சிங்கம் என்ற பட்டம் வழங்கியதுடன் சிவசாத்திர பண்டிதர் என்றும் இவரைக் குறிக்கிறார். தமது தள்ளாத 70 ஆவது வயதிலும் உ.வே.சா . அவர்களுக்கு உதவியதாக இவர் ஏடுதேடும் பணியில் உதவியதாக உ.வே. சா. அவர்கள் இவரைப் பாராட்டிக் குறிக்கிறார்.

அருட்திரு வேலாயுதத் தம்பிரான் சுவாமிகள்

நல்ல புலமையும் நிருவாகத்திறனும் பெற்றவர். குன்றக்குடிக்கு அருகில் உள்ள காட்டாத்தங்குடி பொய்சொல்லா மெய்யர் என்னும் ஐயனாருக்கு நம் ஆதீன மண்டகப்படிக்குச் சென்றிருந்த இவர், நீரின்றி மக்கள் வாடியது கண்டு,

தருணம் இதுவாகும் தான்மாரி பெய்யக்
கருணை செய் யாதிருக்க லாமா வருணனிடம்
நீர்உரைத்துப் பொய்சொல்லா மெய்யரே இந்நிமிடம்
மாரி பெய்யச் செய்வீர் வரம்

என்று பாட மழை பெய்தது. மகிழ்ச்சியால் மக்கள் மனமும் நிரம்பியது.

- அருள்தரு சண்முகநாதப் பெருமான் திருக்கோயில் திருக்குட நீராட்டு மலர்

இறுக்கம் தவிர்த்தல் எப்போதும் நல்லது

(21.03.2015 ஆம் நாள் நிகழ்ந்த "சிந்தனை நந்தவனம்" 150-ஆவது ஆய்வரங்கத்தில் தவத்திரு குருமகாசந்நிதானம் பொன்னம்பல அடிகளார் ஆற்றிய சிறப்புரையின் ஒரு பகுதி

இன்று நமது சிந்தனைக்குரிய ஆய்வுப் பொருளாகத் திருக்குறளின் 72-ஆம் அதிகாரம் "அவை அறிதல்" என்னும் பகுதியின் முதலாம் குறள் அமைகிறது. "அவை அறிந்து ஆராய்ந்து சொல்லுக" என்பது தலைப்பு. குறிப்பறிதல், அவை அறிதல், அவை அஞ்சாமை முதலான அதிகாரங்களில் திருவள்ளுவர் உரையாட்டு நுட்பங்களையெல்லாம் மிக விரிந்த அளவில் சொல்லிப்போகக் காணலாம். அந்த நுட்பங்களை, உரையாட்டு இலக்கணங்கள் எனக் கொண்டால், அந்த இலக்கணங்களுக்குரிய இலக்கியக் காட்சிகளை நமது இலக்கியங்கள் பரந்துபட்ட அளவில் நமக்குக் காட்டுகின்றன.

மிகச்சிறந்த ஓர் உதாரணமாகக் கைகேயி முன்பாக இராமன் உரையாடும் இடத்தைக் குறிப்பிடலாம். கைகேயி, இராமன் என்ற இரண்டு பாத்திரங்கள், அவர்கள் சந்திக்கும் சூழ்நிலை, அப்போது இராமன் ஆற்றும் உரை, அவனது செயற்பாடுகள் எல்லாம் இந்த முதலாம் குறளுக்குத் தீட்டப்பட்ட சொல்லோவியம் போலவே அமைந்துவிடுகின்றன. எது மிகச் சிறந்த உரையாடல்? எது மிகச்சிறந்த அவை அறிதல்? இவை போன்ற வினாக்களுக்குக் கைகையி முன்பாக இராமன் பேசும் பேச்சு, அணுகுமுறை ஆகியன மிகச்சிறந்த விடைகளாக அமைகின்றன.

அழகும் ஆழமும் நுட்பமும் மிகுந்த இராமனின் உரையில் "இறுக்கம் தவிர்த்தல் அல்லது குறைத்தல்" என்னும் ஆர் அற்புதமான "அவை அறிதல்" கூறு வெகு சிறப்பாக அமைந்துள்ளமை காணலாம். தனது நோக்கத்திற்கு ஏற்ப கைகேயி, தன்னிலை விளக்கமாக, மிகத் தெளிவாகப் பேசி முடிக்கிறாள். "இயம்பினன் அரசன்" என்றும் "இது அரசனது ஆணை" என்றும் தெளிவுபடுத்திவிடுகிறாள். இப்போது, அங்கே

தனி ஒருவனாக நிற்கும் இராமனுக்கே அத்தனை பொறுப்பும் கடமையும் என்று ஆகிவிடுகிறது. தந்தையின் ஆணை, அன்னையின் முடிவு வெளிப்படுகிறது; கைகேயி மிகச்சிறப்பாகப் பேசி முடித்துவிட்டாள். எதிர்த்தரப்பு வாதமாக, விளக்கமாக பேசுவதற்கு இடமில்லை, அவசியம் இல்லை என்று இராமன் புரிந்துகொண்டுவிடுகிறான். கைகேயி அன்னைக்கும் தனக்கும் இடையிலான இந்த உரையாடல் நிகழ்வில் அடுத்த உடனடி நிகழ்வாக "இறுக்கம் தவிர்க்கப்படுதல் அல்லது தளர்த்தப்படுதல்" நிகழவேண்டும் என இராமன் உணர்ந்ததும், உணர்ந்து செயல்பட்டதும்தான் மிக அற்புதமான காட்சி ஆகும்.

அந்த "இறுக்கம் தவிர்த்தல்" என்பது இராமனின் முகத்தில் தெரிகிறது; அதுதான் "அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை வென்றது அம்மா" என்ற காட்சி; தொடர்ந்து இராமன் பேசும்போதும் மிக நிதானமாக "இறுக்கம் தவிர்த்தல் அல்லது தளர்த்தல்" முறையிலேயே பேசுகிறான். "மன்னவன் பணி அன்றாகில், நும்பணி மறுப்பெனோ?" என்கிறான். "பின்னவனாகிய தம்பி பரதன் பெற்றது அடியேன் பெற்றது அல்லவா?" என்கிறான். "இனி பேசுதற்கு என்ன இருக்கிறது?" என்கிறான். "இப்பணி தலைமேல் கொண்டேன்" என்கிறான். "மின் ஒளிர் கானம் போக வேண்டும், அவ்வளவுதானே" இதோ, இன்றே போகிறேன், விடையும் கொண்டேன்" என்று சொல்லி அங்கிருந்து புறப்பட்டு இராமன் போய்விட்டான். "அவை அறிக, ஆராய்ந்து சொல்லுக" என்ற வள்ளுவர் குறளுக்கு, அவை அறிந்து, இறுக்கம் தளர்த்தி, தவிர்த்து இராமன் பேசிய பேச்சு மிகச் சிறந்த சான்று ஆகும். அவை அறியும் பேச்சுக்கு "இறுக்கம் தளர்த்தல், அல்லது தவிர்த்தல்" மிக முக்கியம் என்பதை நாம் உணர்ந்துகொள்வோமாக!

(தவத்திரு அடிகளாரின் உரைச்சுருக்கம் - "மு.மு")

நூல்வெளியீட்டு விழா

20.2.2015 அன்று சென்னை, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தில் முனைவர் நயம்பு அறிவுடைநம்பி அவர்கள் எழுதிய "தந்தைபெரியாரும் வான்புகழ் வள்ளுவமும்" என்ற நூலை இயக்குநர் முனைவர் கோ. விசயராகவன் வெளியிட தில்லையாடி ரெ.கணேசனார் பெற்றுக்கொண்டார். முனைவர் கா.காமராசு, நல்லாசிரியர் பு.புருசோத்தமன், முனைவர் ராசா, முனைவர் செல்வகுமார் மற்றும் பலர் உடனிருந்தனர்.

உ
சிவமயம்



தெய்வப்பழநியில் புகழ்பெற்றது
பழநி
பரிமள விலாஸ்
S.சித்தநாதன்

ஜவ்வாது வாசனை விபூதி
&
ஸ்பெஷல் பஞ்சாமிர்தம்

வாங்கி உபயோகியுங்கள்

Prop : S. சித்தனாதன் சன்ஸ்
அடிவாரம், பழநி - 624 601.

போன் கடை : 242405 வீடு & ஸ்டோர் : 242406

மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய திங்களிதழ்

சிறப்பாசிரியர் : **தவத்திரு பொன்னம்பல அடிகளார்**

விவரம்	அளவு	1 வெளியீடு	12 வெளியீடு
பின்அட்டை வெளிப்புறம்	1 பக்கம்	ரூ. 750	ரூ. 7500
அட்டை உட்புறம்	1 பக்கம்	ரூ. 650	ரூ. 6500
இதழ் உட்புறம்	1 பக்கம்	ரூ. 500	ரூ. 5000
இதழ் உட்புறம்	½ பக்கம்	ரூ. 350	ரூ. 3500

சந்தா விவரம்

தனி இதழ்	ரூ.	8.00
ஆண்டுச்சந்தா	ரூ.	90.00
ஆயுட் சந்தா	ரூ.	1000.00
புரவலர் கட்டணம்	ரூ.	2000.00

சந்தா – விளம்பரம் அனுப்பவேண்டிய முகவரி :

நிர்வாகி

மக்கள் சிந்தனை

குன்றக்குடி – 630 206

சிவகங்கை மாவட்டம்

தொலைபேசி எண் : 04577 – 264227

இந்தியன் வங்கி, பிள்ளையார்பட்டி கணக்கு எண் : 554267544 மூலமும் மணியார்டர், வங்கி வரைவோலை / காசோலை மூலமும் அனுப்பலாம்.

ஆதீன இணையதள முகவரி : website : www.kkmutt.org

ஆசிரியர் : **மரு. பரமகுரு**

அச்சிட்டு வெளியிடுவோர் : ஸ்ரீ சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி

BOOK POST

Book pocket containing printed matter

Price Rs. 8-00

MAKKAL CHINTHANAI-March -April 2015 Date of Publication 20-4-2015

பெறுநர்

திரு திருவருள்திரு சுவாமிகள் அவர்கள்,
கோவிலூர் ஆதீனம்,
கோவிலூர்,
மானகிரி-(அஞ்சல்),
காரைக்குடி-(வழி). அவர்கள்

அச்சிட்டோர் : சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி. ✆ : 264166